எஸ்தர் – முன்னுரை

காலமும் இடமும்

எஸ்தர் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சிகள் மேதிய-பெர்சிய தேசத்தின் ராஜாக்களுடைய நாளாகமம் புஸ்தகத்தில் காணப்படுகிறது. (எஸ் 2:21-23;எஸ் 6:1-3; எஸ் 10:2) சூசான் பட்டணம் பெர்சிய தேசத்தின் பழங்காலத்து தலைநகரமாகும். அந்த அரண்மனையில் இந்த நாளாகமம் புஸ்தகத்திலிருந்து செய்திகள் சேகரிக்கப்பட்டு, எஸ்தர் புஸ்தகமாக எழுதப்பட்டிருக்கிறது. (நெகே 1:1; எஸ் 1:1-2) எஸ்தர் புஸ்தகம் எழுதப்பட்ட காலம் சுமார் கி.மு. 516 - 506 ஆகும்.

ஆசிரியர்

எஸ்றா.

யூதருடைய பாரம்பரியத்தின்படி எஸ்றாவே இந்தப் புஸ்தகத்தை எழுதியிருக்கிறார் என்று கூறுகிறார்கள். அகஸ்டின் என்ற திருச்சபை வரலாற்று ஆசிரியரும் இந்தப் புஸ்தகத்தை எஸ்றாவே எழுதியதாகக் கூறுகிறார். எஸ்றா பிரதான ஜெபாலயத்தை ஸ்தாபித்து, அதன் தலைவராக இருந்தார். யூதமார்க்கத்தாரின் வேத புஸ்தகம் இந்த ஜெபாலயத்தில் தொகுத்து வெளியிடப்பட்டிருக்கிறது.

மையக்கருத்து

யூதர்கள் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்த போது அவர்களுடைய ஜீவன்களுக்கு மிகப் பெரிய ஆபத்து உண்டாயிற்று. அந்த ஆபத்திலிருந்து அவர்கள் தப்புவிக்கப்பட்ட சம்பவம் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப் பட்டிருக்கிறது.

யூதருக்கு யார் மூலமாக, எப்படி மீட்பு வந்தது என்பதும், பூரீம் பண்டிகை எவ்வாறு ஆரம்பமாயிற்று என்பதும் சிறையிருப்பிலிருந்து யூதர்கள் விடுவிக்கப்படுவதற்கு அஸ்திபாரமாக அமைந்த வரலாற்று பின்னணியும் இந்தப் புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 10

வசனங்கள் - 167

கேள்விகள் - 21

புதிய தீர்க்கதரிசனம் - 1

கட்டளைகள் - 11

பொருளடக்கம்

I. வஸ்தியின் வரலாறு

1. ஐசுவரியத்தின் திரட்சி (1:1-4)
2. ஜனங்களுக்குப் பெரிய விருந்து (1:5-8)
3. ஸ்திரீகளுக்காக வஸ்தியின் விருந்து (1:9)
4. ராஜவஸ்திரத்தில் ஜனங்களுக்கு முன்பாக வருமாறு வஸ்திக்கு இராஜாவின் கட்டளை (1:10-11)
5. இராஜாவின் கட்டளைக்கு வஸ்தி கீழ்ப்படிய மறுத்துவிடுகிறாள் (1:12)
6. இராஜா கோபமடைந்து வஸ்தியை எவ்வாறு தண்டிப்பது என்று ஆலோசனை பண்ணுகிறான் (1:13-15)
7. மனைவிகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டுமென்று மெமுகான் ஆலோசனை சொல்லுகிறான் (1:16-20)
8. எல்லா வீடுகளிலும் புருஷர்களே தலைவராக இருக்க வேண்டும் என்னும் இராஜாவின் கட்டளை (1:21-22)

II. எஸ்தர் இராணியாகிறாள்

1. அழகு போட்டி (2:1-4)
2. அழகுப்போட்டியில் மொர்தெகாய் எஸ்தரைச் சேர்க்கிறான் (2:5-8)

எஸ்தர் – முன்னுரை

3. ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் கண்களில் எஸ்தருக்கு தயவு கிடைக்கிறது (2:9)

4. எஸ்தரின் இரகசியம் - மொர்தெகாயின் ஆர்வம் (2:10-11)

5. ஒரு வருஷம் ஆயத்தம் (2:12)

6. எஸ்தரின் அறிமுகம் (2:13-16)

7. எஸ்தர் இராணியாகிறாள் (2:17)

8. எஸ்தரின் திருமண விருந்து (2:18-20)

9. மொர்தெகாய் இராஜாவின் உயிரைத் தற்செயலாகக் காப்பாற்றுகிறான் (2:21-23)

III. யூதருக்கு எதிராக ஆமோனின் சதித்திட்டம்

1. ஆமானின் உயர்வு (3:1-2)

2. ஆமானின் சரீரத்தில் ஒருமுள் (3:3-5)

3. மொர்தெகாயின் நிமித்தமாக ஆமான் எல்லா யூதரையும் அழிக்க வேண்டும் என்று சதி பண்ணுகிறான் (3:6-9)

4. ஆமானின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது (3:10-11)

5. எல்லா யூதர்களையும் அழிக்குமாறு இராஜாவின் கட்டளை (3:12-15)

IV. ஆமானின் சதித்திட்டத்தினால் குழப்பங்கள்

1. யூதர்களுக்கு மத்தியில் ஜெபமும் உபவாசமும் (4:1-3)

2. எஸ்தர் மொர்தெகாயிடம் அவனுடைய கவலையைக் குறித்து விசாரிக்கிறாள் (4:4-6)

3. யூதர்களின் பிரச்சனையை மொர்தெகாய் எஸ்தரிடம் கூறுகிறான் (4:7-9)

4. இராஜாவைச் சந்திப்பதில் எஸ்தரின் பிரச்சனை ((4:10-12)

5. எஸ்தருக்கு மொர்தெகாயின் கட்டளை (4:13-14)

6. தன்னுடைய ஜனங்களுக்காக எல்லா ஆபத்தையும் சந்திக்க எஸ்தரின் தீர்மானம் (4:15-17)

7. எஸ்தரின் தைரியம் (5:1-2)

8. எஸ்தரின் விருந்தும் இராஜாவிடம் அவளுடைய விண்ணப்பமும் (5:3-8)

9. ஆமானின் சந்தோஷமும் பெருமையும் (5:9-12)

10. மொர்தெகாயை அழிப்பதற்கு ஆமானின் புதிய சதித்திட்டம் (5:13-14)

11. மொர்தெகாய்க்குத் தெய்வீக உதவி (6:1-3)

12. யூதனாகிய மொர்தெகாயை வாழ்த்துமாறு ஆமானின் கட்டாயம் (6:4-11)

13. ஆமானின் வீழ்ச்சி முற்குறிக்கப்படுகிறது (6:12-14)

14. இராஜாவுக்கும் ஆமானுக்கும் எஸ்தரின் விருந்து (7:1-2)

15. தனது ஜீவனுக்காகவும் யூதருடைய ஜீவனுக்காகவும் எஸ்தரின் விண்ணப்பம் (7:3-4)

16. இராஜாவின் விசாரிப்பும் ஆமானின்மீது எஸ்தரின் குற்றச்சாட்டும் (7:5-6)

17. இராஜாவின் கோபமும் ஆமான் இரக்கத்திற்காகக் கெஞ்சுவதும் (7:7)

18. மொர்தெகாய்க்கு ஆயத்தம் பண்ணின தூக்குமரத்தில் ஆமானைத் தூக்கிப்போட்டார்கள் (7:8-10)

V. ஆமானின் சதித்திட்டம் திரும்புகிறது

1. ஆமானின்மீது பழி தீர்க்கப்படுவது (8:1-2)

2. தன் ஜீவனுக்காகவும் தன் ஜனங்களின் ஜீவனுக்காகவும் எஸ்தரின் மன்றாட்டு (8:3-6)

எஸ்தர் – முன்னுரை

3. யூதர்களைக் காப்பாற்றுவதற்கும் அவர்களுடைய விரோதிகளை அழிப்பதற்கும் புதிய கட்டளை (8:7-14)

4. மொர்தெகாயும் யூதர்களும் உயர்த்தப் படுகிறார்கள் (8:15-17)

5. மொர்தெகாயின் பயமும் யூதர்கள் தங்கள் விரோதிகள்மீது விழுவதும் (9:1-5)

6. சூசான் அரண்மனையில் யூதரின் 500 விரோதிகள் கொல்லப்படுகிறார்கள் (9:6-11)

7. எஸ்தரின் மற்ற விண்ணப்பங்களையும் இராஜா அங்கீகரிக்கிறான் (9:12)

8. ஆமானின் பத்து குமாரர்கள் தூக்கிலிடப் படவேண்டும் என்னும் எஸ்தரின் விண்ணப்பம் - யூதர்களின் விரோதிகளுக்கு மேலும் தண்டனைகள் - சூசானில் மேலும் முந்நூறு பேர் கொல்லப்படுகிறார்கள் (9:13-15)

9. மற்ற பிரதேசங்களில் யூதரின் 75,000 விரோதிகள் கொல்லப்படுகிறார்கள் (9:16)

10. எல்லா யூதருக்கும் சந்தோஷம் (9:17-19)

VI. பூரிம் பண்டிகை - எஸ்தர் இராணியின் காலத்தில் யூதர்கள் மீட்கப்பட்டதை நினைவுகூரும் வருடாந்திர பண்டிகை (9:20-32)

VII. பெர்சிய இராஜ்ஜியத்தில் மொர்தெகாயின் உயர்வு (10:1-3)

1 அதிகாரம்

I. வஸ்தியின் வரலாறு

1. ஐசுவரியத்தின் திரட்சி

எஸ்தர் 1:1 இந்துதேசம்முதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேருவின் நாட்களிலே சம்பவித்ததாவது:

எஸ்தர் 1:2 ராஜாவாகிய அகாஸ்வேரு சூசான் அரமனையிலிருக்கிற தன் ராஜ்யத்தின் சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தான்.

எஸ்தர் 1:3 அவன் தன் ராஜ்யபாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்து பண்ணினான். அப்பொழுது பெர்சியா மேதியா தேசங்களிலுள்ள மகத்தானவர்களும், நாடுகளின் அதிபதிகளும், பிரபுக்களும், அவன் சமுகத்தில் வந்திருந்தார்கள்.

எஸ்தர் 1:4 அவன் தன் ராஜ்யத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன் மகத்துவத்தின் சிறந்த பிரதாபத்தையும் அநேக நாளாகிய நூற்றெண்பது நாளளவும் விளங்கச்செய்து கொண்டிருந்தான்.

"அகாஸ்வேரு" (Ashusuerus) - இந்தப் பெயருக்கு "மாமல்லன்" "the Mighty" அல்லது "பேரரசன்" "Venerable king" என்று பொருள். இந்த வசனத்தில் கூறப்பட்டிருக்கும் அகாஸ்வேரு என்பவன் தரியு ஹிஸ்டாஸ்பிஸின் குமாரனாகிய சஷ்டா என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த அகாஸ்வேரு இவர்கள் கூறுவதுபோல சஷ்டாவாக இருக்க முடியாது. எஸ்தர் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கும் சம்பவம் சஷ்டாவின் காலத்திற்குப் பல வருஷங்களுக்கு முன்பு நடைபெற்றவையாகும்.

எஸ் 2:5-7 ஆகிய வசனங்களில் மொர்தெகாயைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இவன் எஸ்தரின் உறவினன். மொர்தெகாயின் சிறிய தகப்பனுடைய குமாரத்தி எஸ்தர். இவர்கள் இருவரும் உறவினர்கள். எஸ்தருடைய தாயும், தகப்பனும் மரித்துவிட்டார்கள். எஸ்தர் மொர்தெகாயின் பராமரிப்பில் வளர்ந்து வருகிறாள். யூதாவின் ராஜாவாக யோயாக்கீன் இருந்த காலத்தில் நேபுகாத்நேச்சார் யூதர்களைச் சிறைப்பிடித்துச் சென்றான். அந்தக் கூட்டத்தில் மொர்தெகாயும், அவனோடுகூட எஸ்தரும் பாபிலோன் தேசத்திற்குச் சிறைப்பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

இந்தச் சிறையிருப்பு எருசலேம் பட்டணம் அழிக்கப்படுவதற்கு முன்பாகவும், யூதாவின் இறுதி சிறையிருப்புக்கு 11 வருஷங்களுக்கு முன்பாகவும் நடைபெற்றது. (2இராஜா 24:1-25:30; எரே 25:1). யூதர்கள் பாபிலோனில் 70 வருஷம் சிறையிருப்பில் இருக்கிறார்கள். யோயாக்கீமின் 4 ஆம் வருஷ ஆட்சிக்காலத்தில் இந்த 70 வருஷத்து சிறையிருப்பு ஆரம்பமாயிற்று. (எரே 25:1,9-11)

மொர்தெகாய் யோயாக்கீனோடு பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுச் சென்றபோது அவன் ஒரு வாலிபனாக இருந்திருக்க வேண்டும். சிறையிருப்புக்காலம் முழுவதும் மொர்தெகாய் உயிரோடு இருக்கிறான். எஸ்றா 2:2; நெகே 7:7 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் மொர்தெகாயும், இவனும் ஒரே நபராக இருக்கலாம். ஏனெனில் சிறையிருப்புக்குப் போன யூதர்களில் சிலர் 70 வருஷங்களுக்கும் உயிரோடிருந்து, அதன்பின்பு, எருசலேமிற்குத் திரும்பி வந்து, தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடுவதைத் தங்கள் கண்களால் பார்த்திருக்கிறார்கள். (எஸ்றா 3:12).

"நூற்றிருபத்தேழு நாடுகள்" - இந்த வசனத்தில் அகாஸ்வேருவின் ராஜ்யபாரத்தில் 127 நாடுகள் இருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. தானி 6:1 ஆவது வசனத்தில் 120 நாடுகள் என்று கூறப்பட்டிருக்கிறது. நாடுகளின் எண்ணிக்கை மாற்றமடைந்து கொண்டேயிருக்கும். புதிய மாகாணங்கள் ஆரம்பிக்கப்படும். சில மாகாணங்கள் மற்ற மாகாணங்களோடு சேர்க்கப்படும். ஆகையினால் அகாஸ்வேருவின் ஆட்சிக் காலத்தில் 127 நாடுகளோ அல்லது அதற்கு மேலோ அல்லது அதற்கு குறைவாகவோ இருப்பதற்கு வாய்ப்புள்ளது. தானி 6:1 ஆவது வசனத்தில் மட்டுமே 120 நாடுகள் என்று கூறப் பட்டிருக்கிறது.

எஸ்தர் – தொகுப்புரை

1 அதிகாரம்

அகாஸ்வேரு தன்னுடைய தேசத்தை ஏழு மாகாணங்களாகப் பிரித்தான். ஒவ்வொரு மாகாணத்திற்கும் அதிபதிகளை நியமித்தான். எஸ் 6:13-14 ஆகிய வசனங்களில் பெர்சிய தேசத்தின் ஏழு அதிபதிகளின் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு காலத்தில் வலிமை பெற்றிருந்த பாபிலோன் பேரரசு பிற்காலத்தில் மேதியருடைய ஆட்சிக்கு உட்பட்டது. மேதியாவின் ராஜாவாகிய தரியு அல்லது அகாஸ்வேரு பாபிலோனைக் கைப்பற்றினான். தான் புதிதாகச் சேர்த்துக் கொண்ட பாபிலோன் ராஜ்யத்தை 120 பகுதிகளாகப் பிரித்தான். (தானி 9:1; தானி 6:1) எஸ் 1:1 ஆவது வசனத்தில் 127 நாடுகள் என்று கூறப்பட்டிருப்பது பெர்சியாவின் ஏழு மாகாணங்களையும், பாபிலோனின் 120 மாகாணங்களையும் சேர்த்துக் குறிப்பதாக இருக்கலாம். (எஸ் 6:1; எஸ் 9:30).

தரியு ஹிஸ்டாஸ்பிஸின் ஆட்சிக் காலத்தில் பெர்சிய தேசம் 23 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்னும் செய்தி பெர்சியரின் கல்வெட்டுக்கள் மூலமாகத் தெரிய வருகிறது.

"சூசான் அரமனை" - அகாஸ்வேரு ராஜா சூசான் அரண்மனையில் தங்கியிருக்கிறான். மற்ற சமயங்களில் ராஜா எக்பாத்தானாவிலும் (Ecbatana) அல்லது வேறு மாளிகைகளிலும் தங்கியிருப்பான். எஸ் 1:1 ஆவது வசனத்தில் ராஜாவைப் பற்றியும், எஸ் 1:2 ஆவது வசனத்தில் அரமனையைப் பற்றியும், எஸ் 1:3 ஆவது வசனத்தில் ராஜாவின் ஆட்சிக் காலத்தைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. வேதாகமத்தில் "சூசான்" (Shushan) என்னும் பெயர் 21 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எஸ் 1:2-9:18; நெகே 1:1; தானி 8:2). மறுபெயர் சூசா (Susa) பெர்சிய வளைகுடாவிற்குக் கிழக்கே ஷப்பூர் நதியோரத்தில் சூசான் பட்டணம் அமைந்துள்ளது.

"பெர்சியா மேதியா தேசங்கள்" - எஸ்தர் புஸ்தகத்தில் எஸ் 10:2 ஆவது வசனத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் பெர்சியா என்னும் பெயர் மேதியா என்னும் பெயருக்கு முன்பாக வருகிறது. ஆனால் தானியேலின் புஸ்தகத்திலோ மேதியா என்னும் பெயரே முதலாவதாகவும், அதன் பின்பு பெர்சியா என்னும் பெயரும் வரும். பெர்சியாவும், மேதியாவும் இணைந்த ராஜ்யங்கள். அகாஸ்வேருவின் காலத்தில் பெர்சியா வலிமை பெற்றதாக இருந்ததினால், பெர்சியாவின் பெயர் முதலாவதாகக் கூறப்படுகிறது.

"தன் ராஜ்யத்தின் மகிமையான ஐசுவரியத்தையும், தன் மகத்துவத்தின் சிறந்த பிரதாபத்தையும்" - அகாஸ்வேரு ராஜா ஒரு பெரிய விருந்து பண்ணினான். தன்னுடைய ராஜ்யத்தின் ஐசுவரியங்களையும், மகிமையையும், எல்லோருக்கும் வெளிப்படுத்திக் காண்பிப்பதற்காக இந்த விருந்து நடைபெறுகிறது. 180 நாட்களுக்கு விருந்து நடைபெறுகிறது. ராஜாவின் 127 தேசங்களிலுள்ள அதிபதிகளெல்லாம் விருந்துக்கு வரவேண்டும். எல்லோரும் வந்துபோவதற்கு வசதியாக ராஜாவின் விருந்து பல நாட்களுக்கு நடைபெறுகிறது. 180 நாள் விருந்து முடிந்தபின்பு, மேலும் ஒரு விசேஷித்த விருந்து இதைத் தொடர்ந்து 7 நாட்களுக்கு நடைபெறுகிறது. பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள சமஸ்த ஜனங்களுக்கும் இந்த விருந்து பிரயேத்தியேகமாக நடைபெறுகிறது.(எஸ் 1:5).

2. ஜனங்களுக்குப் பெரிய விருந்து

எஸ்தர் 1:5 அந்த நாட்கள் முடிந்தபோது, ராஜா சூசான் அரமனையில் வந்திருந்த பெரியோர்முதல் சிறியோர்மட்டுமுள்ள சமஸ்த ஜனங்களுக்கும் ராஜ அரமனையைச் சேர்ந்த சிங்காரத் தோட்டத்திலுள்ள மண்டபத்தில் ஏழுநாள் விருந்துசெய்வித்தான்.

எஸ்தர் 1:6 அங்கே வெண்கலத் தூண்களின்மேலுள்ள வெள்ளி வளையங்களில் மெல்லிய நூலும் சிவப்பு நூலுமான கயிறுகளால் வெள்ளையும் பச்சையும் இளநீலமுமாகிய தொங்கு திரைகள் விதானித்திருந்தது; சிவப்பும் நீலமும் வெள்ளையும் கறுப்புமான கற்கள் பதித்திருந்த தளவரிசையின் மேல் பொற்சரிகையும் வெள்ளிச்சரிகையுமான மெத்தைகள் வைக்கப்பட்டிருந்தது.

எஸ்தர் - தொகுப்புரை

1 அதிகாரம்

எஸ்தர் 1:7 பொன்னால் செய்யப்பட்ட நானாவித பாத்திரங்களிலே பானம் கொடுக்கப்பட்டது; முதல்தரமான திராட்சரசம் ராஜஸ்திதிக்கு ஏற்கப் பரிபூரணமாய்ப் பரிமாறப்பட்டது.

எஸ்தர் 1:8 அவரவருடைய மனதின்படியே செய்யலாம் என்று ராஜா தன் அரமனையின் பெரிய மனுஷருக்கெல்லாம் கட்டளையிட்டிருந்த படியினால், முறைப்படி பானம் பண்ணினார்கள்; ஒருவனும் பலவந்தம் பண்ணவில்லை.

"ராஜ அரமனையைச்சேர்ந்த சிங்காரத் தோட்டத்திலுள்ள மண்டபம்" - ராஜாவுடைய அரமனையில் பல தோட்டங்களும், பல மண்டபங்களும் உள்ளன. இவை ஒவ்வொன்றையும் ராஜா ஒவ்வொரு விசேஷித்த காரியத்திற்காகப் பயன்படுத்துவார்.

"நானாவித பாத்திரங்களிலே" - ராஜா கொடுக்கும் விருந்தில் முதல்தரமான திராட்சரசம் பரிமாறப்படுகிறது. அதுவும் ராஜஸ்திதிக்கு ஏற்கப் பரிபூரணமாய்ப் பரிமாறப்பட்டது. பொன்னால் செய்யப்பட்ட பாத்திரங்களில் திராட்சரசத்தைப் பரிமாறினார்கள். முதல்தரமான திராட்சரசம் என்பது ராஜகுலத்தாருக்கு மட்டுமே பரிமாறப்படும்.

"முறைப்படி பானம் பண்ணினார்கள்" - அக்காலத்தில் திராட்சரசம் பானம் பண்ணுவதற்கும் சில விதிமுறைகளை வகுத்திருந்தார்கள். எகிப்தியர்கள் போஜனம் பண்ணுவதற்கு முன்பாகவும், போஜனம் பண்ணும்போதும் திராட்சரசம் பருகுவார்கள். கிரேக்கர் மத்தியில் திராட்சரசம் பருகுவது பந்தியில் கட்டாயமான பழக்கமாகும். ரோமர் பந்தியிருக்கும்போது, தங்களுடைய பந்திக்குத் தலைவரைச் சீட்டுப் போட்டு தேர்ந்தெடுப்பார்கள். யூதர் மத்தியில்கூட பந்தியின் தலைவரை "விருந்துக்கு எஜமான்" என்று அழைத்தார்கள். (யோவான் 2:8). அகாஸ்வேரு ராஜாவினுடைய விருந்தில் திராட்சரசம் பருகுமாறு யாரும் யாரையும் பலவந்தம் பண்ணவில்லை.

3. ஸ்திரீகளுக்காக வஸ்தியின் விருந்து

எஸ்தர் 1:9 ராஜஸ்திரீயாக வஸ்தியும் ராஜாவாகிய அகாஸ்வேருவின் அரமனையிலே ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து செய்தாள்.

"ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து செய்தாள்" - கிழக்குதேசங்களில் ஸ்திரீகள் புருஷரோடு விருந்தில் அமர்வதில்லை. புருஷருக்கும், ஸ்திரீகளுக்கும் தனித்தனியாக தனித்தனி இடங்களில் விருந்து நடைபெறும்.

4. ராஜவஸ்திரத்தில் ஜனங்களுக்கு முன்பாக வருமாறு வஸ்திக்கு இராஜாவின் கட்டளை

எஸ்தர் 1:10 ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும் போது, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக, அவளை ராஜாவுக்கு முன்பாக அழைத்துவர வேண்டுமென்று,

எஸ்தர் 1:11 ராஜாவாகிய அகாஸ்வேருவின் சமுகத்தில் சேவிக்கிற மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் என்னும் ஏழு பிரதானிகளுக்கும் கட்டளையிட்டான்.

"ஏழாம் நாளிலே" - விருந்தின் ஏழாம் நாள் முடிவில் ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கிறான். தன்னுடைய ராஜஸ்திரீயின் சௌந்தரியத்தை ஜனங்களுக்கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி விரும்புகிறான். அவளை விருந்து நடைபெறும் இடத்திற்கு அழைத்துவருமாறு தன்னுடைய ஏழு பிரதானிகளுக்கும் ராஜா கட்டளையிடுகிறான். (எஸ் 1:10-11). ஆனால் ராஜஸ்திரீயாகிய வஸ்தியோ வரமறுத்துவிடுகிறாள்.

பிரதானி (chamberlain) - סָרִיס - saw-reece', saw-reece' - 5631

ஆ.பெ.சொ. - பிரதானி, சாரீஸ், பிரதானியன், அண்ணகர், அரமனை, வேலைக்காரர் (chamberlain, officer, and eunuch)

எஸ்தர் – தொகுப்புரை

1 அதிகாரம்

5. இராஜாவின் கட்டளைக்கு வஸ்தி கீழ்ப்படிய மறுத்துவிடுகிறாள்

எஸ்தர் 1:12 ஆனாலும் பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்லியனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி வரமாட்டேன் என்றாள்; அப்பொழுது ராஜா கடுங்கோபமடைந்து, தனக்குள்ளே மூர்க்கவெறி கொண்டான்.

"ராஜா கடுங்கோபமடைந்து, தனக்குள்ளே மூர்க்கவெறிகொண்டான்" - ராஜா அழைத்தும், ராஜஸ்திரீ வர மறுத்துவிடுகிறாள். இதனால் ராஜாவுக்குக் கடுங்கோபம் உண்டாயிற்று. ஜனங்களும் பிரதானிகளும் குடித்து வெறித்திருக்கும் இடத்தில் ராஜஸ்திரீயை வரவழைப்பது முறையல்ல. ராஜஸ்திரீயின் அந்தஸ்துக்கும் அது தகுதியானதல்ல. மேலும் ராஜா ராஜஸ்திரீயிடம் நேரில் போய் அழைக்காமல், தன் பிரதானிகள் மூலமாகச் செய்தி அனுப்புகிறான். பெர்சிய தேசத்து வழக்கத்தின் பிரகாரம் ராஜஸ்திரீ தன்னுடைய முகத்தைப் பொதுஜனங்களுக்குக் காண்பிக்க மாட்டாள். ராஜஸ்திரீ தன்னுடைய அந்தஸ்தையும், தன்னுடைய பழக்க வழக்கங்களையும் யோசித்துப் பார்க்கிறாள். ஆனால் ராஜாவோ தன்னுடைய அதிகாரத்தை மட்டும் யோசித்துப் பார்த்து ராஜஸ்திரீயின்மீது கடுங்கோபம் அடைகிறான். ராஜாவின் கோபத்திற்குக் காரணமுள்ளது. ஏனெனில் பெர்சிய தேசத்தில் ராஜஸ்திரீக்குச் சிறப்பாக எந்த அதிகாரமும் இல்லை. எல்லா அதிகாரமும் ராஜாவிற்கே உரியது. ராஜஸ்திரீ ராஜாவின் அடிமைகளில் ஒருத்தியைப் போலவே நடத்தப்படுகிறாள். ராஜஸ்திரீ ராஜாவைப் பார்க்க வேண்டுமானாலும் அவர் அழைத்தால் மட்டுமே அவருக்கு முன்பாகப் போகமுடியும்.

6. இராஜா கோபமடைந்து வஸ்தியை எவ்வாறு தண்டிப்பது என்று ஆலோசனை பண்ணுகிறான்

எஸ்தர் 1:13 அச்சமயத்தில் ராஜசமுகத்தைத் தரிசிக்கிறவர்களும், ராஜ்யத்தின் முதல் ஆசனங்களில் உட்காருகிறவர்களுமான கர்ஷேனா, சேதார், அத்மாதா, தர்ஷீஸ், மேரேஸ், மர்சேனா, மெமுகான் என்னும் பெர்சியர் மேதியருடையஏழு பிரபுக்களும் அவன் சமீபத்தில் இருந்தார்கள்.

எஸ்தர் 1:14 ராஜா நியாயப் பிரமாணத்தையும் ராஜநீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது தனக்கு வழக்கமானபடியால், காலாகால வர்த்தமானங்களை அறிந்த பண்டிதர்களை நோக்கி:

எஸ்தர் 1:15 ராஜாவாகிய அகாஸ்வேரு பிரதானிகள் மூலமாய்ச் சொல்லி யனுப்பின கட்டளையின்படி ராஜஸ்திரீயாகிய வஸ்திசெய்யாமற் போனதினிமித்தம், தேசச் சட்டத்தின்படி அவளுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான்.

"காலாகால வர்த்தமானங்களை அறிந்த பண்டிதர்கள்" - வஸ்தி ராஜாவின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிடுகிறாள். தன்னுடைய தேசத்தினுடைய சட்டத்தின் பிரகாரம் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைக் குறித்து ராஜா காலாகால வர்த்தமானங்களை அறிந்த பண்டிதர்களிடம் விசாரிக்கிறான். (எஸ் 1:13-15).

7. மனைவிகள் கீழ்ப்படிந்து இருக்க வேண்டுமென்று மெமுகான் ஆலோசனை சொல்லுகிறான்

எஸ்தர் 1:16 அப்பொழுது மெமுகான் ராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்னே பிரதியுத்தரமாக: ராஜஸ்திரீயாகிய வஸ்தி ராஜாவுக்குமாத்திரம் அல்ல, ராஜாவாகிய அகாஸ்வேருவினுடைய சகல நாடுகளிலுமுள்ள சகல பிரபுக்களுக்கும் சகல ஜனங்களுக்குகூட அநியாயஞ் செய்தாள்.

1 அதிகாரம்

எஸ்தர் 1:17 ராஜாவாகிய அகாஸ்வேரு ராஜஸ்திரீயாகிய வஸ்தியைத் தமக்கு முன்பாக அழைத்துவரச் சொன்னபோது, அவள் வரமாட்டோம் என்கிற செய்தி எல்லா ஸ்திரீகளுக்கும் பிரசித்தமானால், அவர்களும் தங்கள் புருஷரைத் தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள்.

எஸ்தர் 1:18 இன்றையதினமே பெர்சியாவிலும் மேதியாவிலுமுள்ள பிரபுக்களின் ஸ்திரீகள் ராஜஸ்திரீயின் செய்தியைக் கேட்கும்போது, ராஜாவின் பிரபுக்களுக்கெல்லாம் அப்படியே சொல்லுவார்கள்; மிகுந்த அசட்டையும் எரிச்சலும் விளையும்.

எஸ்தர் 1:19 ராஜாவுக்குச் சம்மதியாயிருந்தால், வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு முன்பாக வரக்கூடாது என்றும், அவளுடைய ராஜமேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியாகிய மற்றொரு வஸ்திரீக்கு ராஜா கொடுப்பாராக என்றும், அவரால் ஒரு ராஜகட்டளை பிறந்து, அது மீறப்படாதபடிக்கு, பெர்சியாவுக்கும் மேதியாவுக்கும் உரிய தேசச் சட்டத்திலும் எழுதப்படவேண்டும்.

எஸ்தர் 1:20 இப்படி ராஜா தீர்த்த காரியம் தமது விஸ்தீரணமான ராஜ்யமெங்கும் கேட்கப்படும்போது, பெரியோர்முதல் சிறியோர் மட்டுமுள்ள எல்லா ஸ்திரீகளும் தங்கள் புருஷரைக் கனம்பண்ணுவார்கள் என்றான்.

“சகல ஜனங்களுக்குகூட அநியாயஞ் செய்தாள்” - ராஜஸ்திரீயாகிய வஸ்தி ராஜாவுக்குமாத்திரம் அல்ல, சகல பிரபுக்களுக்கும் சகல ஜனங்களுக்குகூட அநியாயஞ்செய்தாள் என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள். ராஜஸ்திரீ ராஜா அழைத்தும் வராத செய்தி தேசத்தின் மற்ற ஸ்திரீகளுக்கும் பிரசித்தமானால், அவர்களும் தங்கள் புருஷரைத் தங்கள் பார்வையில் அற்பமாய் எண்ணுவார்கள் என்று பண்டிதர்கள் கூறுகிறார்கள். (எஸ் 1:16-18).

“வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு முன்பாக வரக்கூடாது” - வஸ்தி ராஜாவுக்குக் கீழ்ப்படியாமற்போனதினால் அவளை ராஜஸ்திரீயின் ஸ்தானத்திலிருந்து அகற்றி விட்டு, அவளுக்குப் பதிலாக வேறொரு ஸ்திரீயை ராஜா தன்னுடைய ராஜஸ்தீரியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று பண்டிதர்கள் தங்களுடைய ஆலோசனையைக் கூறுகிறார்கள்.

எஸ்தர் புஸ்தகத்தில் தேவனுடைய நாமம்

எஸ்தர் புஸ்தகத்தில் தேவனுடைய பெயரைப் பற்றி ஒரு வசனத்தில்கூட கூறப்படவில்லை என்று ஒரு கருத்து உள்ளது. இந்த புஸ்தகத்தில் 167 வசனங்கள் உள்ளன. ராஜாவைப் பற்றி 195 தடவைகளும், அவனுடைய ராஜ்யத்தைப் பற்றி 28 தடவைகளும், அகாஸ்வேருவின் பெயர் 29 தடவைகளும் இந்தப் புஸ்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய பெயர் ஒரு தடவைகூட இந்தப் புஸ்தகத்தில் கூறப்படவில்லை.

எஸ்தர் புஸ்தகத்தில் கர்த்தருடைய பெயர் வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும், எபிரெய பாஷையில் எழுதப்பட்டிருக்கும் எஸ்தர் புஸ்தகத்தில் 5 இடங்களில் கர்த்தரைக் குறிக்கும் வார்த்தை மறைந்துள்ளது. நான்குஇடங்களில் **"JHVH"** என்னும் வார்த்தையும், ஒரு இடத்தில் **"EHYEH"** என்னும் வார்த்தையும், மறைவாக உள்ளன. **"JHVH"** என்னும் வார்த்தை யெகோவாவைக் **"JeHoVaH"** குறிக்கும். **"EHYEH"** என்னும் வார்த்தை “நான் நானாக இருக்கிறேன்” **"I Am that I Am"** என்னும் பொருளைத் தரும். இந்த எழுத்துக்கள் எபிரெய மொழியில் எழுதப்பட்ட சுவடிகளில் “கரந்துறை பாட்டாக” **(acrostics)** பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கரந்துறை என்பதற்கு வரிகளின் முதல் எழுத்தை அல்லது கடை எழுத்தை கூட்டுதலால் சொல்லுண்டாகும் பாட்டு வகை அல்லது புதிர்வகை என்று பொருள். பழைய ஏற்பாட்டின் மூன்று சுவடிகள் மற்ற சுவடிகளைவிட பெரியதாக உள்ளன. இதற்குக் கரந்துறைப் பாடல்களே காரணமாகும்.

எஸ்தர் – தொகுப்புரை

1 அதிகாரம்

"JHVH" என்னும் எழுத்துக்கள் எபிரேய சுவடிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் விதம்

1. "எல்லா ஸ்திரீகளும் தங்கள் புருஷரைக் கனம்பண்ணுவார்கள்" **"All the wives shall give"** (எஸ் 1:20). இந்த வாக்கியம் மெமுகான் கூறியதாகும்.

2. "ராஜாவும் ஆமானும் இன்றைக்கு வரவேண்டும்" **"Let the king and Haman come this day"** (எஸ் 5:4). இந்த வாக்கியம் எஸ்தர் கூறியதாகும்.

3. "அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லை" **"This availeth me nothing"** (எஸ் 5:13). இந்த வார்த்தை ஆமான் கூறியதாகும்.

4. "ராஜாவினால் தனக்குப் பொல்லாப்பு நிர்ணயிக்கப்பட்டது" **"That there was evil determined against him"** (எஸ் 7:7). இந்த வாக்கியம் எஸ்தர் புஸ்தகத்தின் ஆசிரியர் கூறியதாகும்.

5. "யார்? அவன் எங்கே?" **"Who is he, and where is he"** (எஸ் 7:5). இந்த வாக்கியத்தில் 'EHYEH אֶהְיֶה - haw-yaw' - 1961 என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

8. எல்லா வீடுகளிலும் புருஷர்களே தலைவராக இருக்க வேண்டும் என்னும் இராஜாவின் கட்டளை

எஸ்தர் 1:21 இந்த வார்த்தை ராஜாவுக்கும் பிரபுக்களுக்கும் நலமாய்த் தோன்றினதினால், ராஜா மெமுகானுடைய வார்த்தையின்படியே செய்து,

எஸ்தர் 1:22 எந்தப் புருஷனும் தன் வீட்டுக்குத்தானே அதிகாரியாயிருக்க வேண்டும் என்றும், இதை அந்தந்த ஜனங்களுடைய பாஷையிலே பிரசித்தம் பண்ணவேண்டும் என்றும், அந்தந்த நாட்டில் வழங்குகிற அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசுகிற பாஷையிலும், ராஜாவின் சகல நாடுகளுக்கும் கட்டளை எழுதி அனுப்பினான்.

2 அதிகாரம்

II. எஸ்தர் இராணியாகிறாள்

1. அழகு போட்டி

எஸ்தர் 2:1 இவைகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேருவின் உக்கிரம் தணிந்தபோது, அவன் வஸ்தியையும் அவள் செய்ததையும் அவளைக் குறித்துத் தீர்மானிக்கப்பட்டதையும் நினைத்தான்.

எஸ்தர் 2:2 அப்பொழுது ராஜாவைச் சேவிக்கிற அவனுடைய ஊழியக்காரர் அவனை நோக்கி: ரூபவதிகளாயிருக்கிற கன்னிப் பெண்களை ராஜாவுக்காகத் தேடவேண்டும்.

எஸ்தர் 2:3 அதற்காக ராஜா தம்முடைய ராஜ்யத்தின் நாடுகளிலெல்லாம் விசாரிப்புக்காரரை வைக்கவேண்டும்; இவர்கள் ரூபவதிகளாயிருக்கிற சகல கன்னிப்பெண்களையும் கூட்டி, சூசான் அரமனையிலிருக்கிற கன்னிமாடத்துக்கு அழைத்துவந்து, ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாயின் வசத்திலே ஒப்புவிக்க வேண்டும்; அவர்களுடைய சுத்திகரிப்புக்கு வேண்டியவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

எஸ்தர் 2:4 அப்பொழுது ராஜாவின் கண்களுக்குப் பிரியமான கன்னி வஸ்திக்குப் பதிலாகப் பட்டத்து ஸ்திரீயாகவேண்டும் என்றார்கள்; இந்த வார்த்தை ராஜாவுக்கு நலமாய்த் தோன்றினபடியால் அப்படியே செய்தான்.

"இவைகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேருவின் உக்கிரம் தணிந்தபோது" - வஸ்தி ராஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்து விடுகிறாள். அதனால் "எந்தப் புருஷனும் தன் வீட்டுக்குத் தானே அதிகாரியாய் இருக்க வேண்டும்" என்று ராஜா கட்டளையிட்டு தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட எல்லா தேசங்களுக்கும் அனுப்புகிறான். (எஸ் 1:21-22) இதன் பின்பு ராஜாவின் கோபம் தணிகிறது. வஸ்திக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட ஆணையை ராஜா நினைத்துப் பார்க்கிறான்.

ஊழியக்காரரின் ஆலோசனை

1. ரூபவதிகளாயிருக்கிற கன்னிப்பெண்களை ராஜாவுக்காகத் தேடவேண்டும்.
2. ராஜா தம்முடைய ராஜ்யத்தின் நாடுகளிலெல்லாம் விசாரிப்புக்காரரை வைக்கவேண்டும் (எஸ் 1:3).
3. இவர்கள் ரூபவதிகளாயிருக்கிற சகல கன்னிப்பெண்களையும் கூட்டி, சூசான் அரமனையிலிருக்கிற கன்னிமாடத்துக்கு அழைத்துவர வேண்டும்.
4. அவர்களை ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாயின் வசத்திலே ஒப்புவிக்கவேண்டும்.
5. அவர்களுடைய சுத்திகரிப்புக்கு வேண்டியவைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.
6. ராஜாவின் கண்களுக்குப் பிரியமான கன்னி வஸ்திக்குப் பதிலாகப் பட்டத்து ஸ்திரீயாகவேண்டும் (எஸ் 2:4).

2. அழகுப்போட்டியில் மொர்தெகாய் எஸ்தரைச் சேர்க்கிறான்

எஸ்தர் 2:5 அப்பொழுது சூசான் அரமனையிலே பென்யமீனியனாகிய கீசின் குமாரன் சீமேயினுடைய மகனாகிய யாவீரின் குமாரன் மொர்தெகாய் என்னும் பேருள்ள ஒரு யூதன் இருந்தான்.

எஸ்தர் 2:6 அவன் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய எகொனியாவைப் பிடித்துக் கொண்டு போகிறபோது, அவனோடேகூட எருசலேமிலிருந்து பிடித்துக் கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவனாயிருந்தான்.

2 அதிகாரம்

எஸ்தர் 2:7 அவன் தன் சிறிய தகப்பன் குமாரத்தியாகிய எஸ்தர் என்னும் அத்சாளை வளர்த்தான்; அவளுக்குத் தாய்தகப்பனில்லை; அந்தப் பெண் ரூபவதியும் சௌந்தரியமுடையவளுமாயிருந்தாள்; அவள் தகப்பனும் அவள் தாயும் மரணமடைந்தபோது, மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்துக்கொண்டான்.

எஸ்தர் 2:8 ராஜாவின் கட்டளையும் தீர்மானமும் பிரசித்தமாகி, அநேகம் பெண்கள் கூட்டப்பட்டு, சூசான் அரமனையிலுள்ள யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்படுகிறபோது, எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக் கொண்டுபோகப்பட்டு, ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற யேகாயின் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டாள்.

"மொர்தெகாய் என்னும் பேருள்ள ஒரு யூதன்" - நேபுகாத்நேச்சார் யூதர்களைப் பாபிலோனுக்குச் சிறைப்பிடித்துப் போனபோது, மொர்தெகாயும் அவர்களோடு சிறைக்கைதியாகச் சென்றான். பெர்சிய ராஜாவின் சூசான் அரண்மனைக்கு மொர்தெகாய் எப்படி வந்து சேர்ந்தான் என்று தெரியவில்லை. பெர்சிய தேசத்து ராஜா மொர்தெகாயை அடிமையாகத் தன்னுடைய தேசத்திற்கு அழைத்து வந்திருக்கலாம். இவனிடம் காணப்பட்ட விசேஷித்த திறமையின் நிமித்தமாக பெர்சிய தேசத்து ராஜா மொர்தெகாயைத் தன்னுடைய அரமனையில் சேர்த்திருக்க வேண்டும். தானியேலும், எசேக்கியேலும் பாபிலோனிலே இருந்து விட்டார்கள்.

"நேபுகாத்நேச்சார் யூதாவின் ராஜாவாகிய எகொனியாவைப் பிடித்துக்கொண்டு போகிறபோது" - யோயாக்கீம் 11 வருஷங்கள் ஆட்சி புரிந்தபிறகு, சிதேக்கியாவின் 11 வருஷ ஆட்சிக் காலத்திற்கு முன்பு இந்தச் சம்பவம் நடைபெறுகிறது. (2இராஜா 24; எரே 52:24- 34).

அத்சாள் (Hadassah) - הֲדַסָּה - had-as-saw' - 1919

பெண்பால் பெயர்ச்சொல் - அத்சாள் "myrtle" - இந்தப் பெயருக்கு "பசுமை மாறாத நறுமண மலர்ச்செடி" என்று பொருள். மொர்தெகாய் எஸ்தரைத் தன்னுடைய சொந்த மகளைப் போல பராமரித்து வளர்த்து வருகிறான். மொர்தெகாய் அரமனை வேலையை விசாரித்து வரும்போது அத்சாள் என்னும் எஸ்தர் அவனோடு அரமனைக்கு வெளியே வசித்து வருகிறாள்.

"எஸ்தர்" (Esther) - இந்தப் பெயருக்கு "நட்சத்திரம்" "star" என்று பொருள். இந்தப் புஸ்தகத்தில் இவளுடைய பெயர் 56 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

"எஸ்தரும் ராஜாவின் அரமனைக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டு" - அகாஸ்வேரு ராஜா தன்னுடைய பெர்சிய தேசத்திலுள்ள ரூபவதிகளாயிருக்கிற சகல கன்னிப் பெண்களையும் கூட்டி, சூசான் அரமனையிலிருக்கிற கன்னிமாடத்திற்கு அழைத்து வருகிறான். அவர்களில் எஸ்தரும் ஒருத்தியாக அழைத்து வரப்படுகிறாள். இவர்கள் எல்லோரும் ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாயின் வசனத்தில் ஒப்புவிக்கப்படுகிறார்கள். யேகாயின் கண்களிலேயே எஸ்தருக்குத் தயவு கிடைக்கிறது. (எஸ் 2:9). கர்த்தர் தம்முடைய அநாதித் தீர்மானத்தின் பிரகாரமாக எஸ்தரை சூசான் அரமனைக்கு அழைத்து வருகிறார். யூதா மார்க்கத்திலுள்ள எல்லோரையும் கொன்று போட வேண்டுமென்று சாத்தான் ஆமான் என்னும் துன்மார்க்கன் மூலமாகச் சதி பண்ணுகிறான். சாத்தானுடைய இந்தச் சதி செயல், எஸ்தர் மூலமாக முறியடிக்கப்படுகிறது. புறஜாதியார் மத்தியில்கூட கர்த்தர் கிரியை செய்து தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவார் என்பதற்கு எஸ்தர் புஸ்தகம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

எஸ்தர் – தொகுப்புரை

2 அதிகாரம்

3. ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற யேகாயின் கண்களில் எஸ்தருக்கு தயவு கிடைக்கிறது

எஸ்தர் 2:9 அந்தப் பெண் அவன் பார்வைக்கு நன்றாயிருந்ததினால், அவளுக்கு அவன் கண்களிலே தயைகிடைத்தது; ஆகையால் அவளுடைய சுத்திகரிப்புக்கு வேண்டியவைகளையும், அவளுக்குத் தேவையான மற்றவைகளையும் அவளுக்குக் கொடுக்கவும், ராஜ அரமனையிலிருக்கிற ஏழு தாதிமார்களை அவளுக்கு நியமிக்கவும் ஜாக்கிரதைப்பட்டு கன்னிமாடத்தில் சிறந்த ஒரு இடத்திலே அவளையும் அவள் தாதிமார்களையும் வைத்தான்.

4. எஸ்தரின் இரகசியம் - மொர்தெகாயின் ஆர்வம்

எஸ்தர் 2:10 எஸ்தரோவென்றால் தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தாள்; மொர்தெகாய் அதைத் தெரிவிக்கவேண்டாமென்று அவளுக்குக் கற்பித்திருந்தான்.

எஸ்தர் 2:11 எஸ்தருடைய சுகசெய்தியையும் அவளுக்கு நடக்குங் காரியத்தையும் அறிய மொர்தெகாய் நாடோறும் கன்னிமாடத்து முற்றத்துக்கு முன்பாக உலாவுவான்.

"எஸ்தரோவென்றால் தன் குலத்தையும், தன் பூர்வோத்தரத்தையும் அறிவிக்காதிருந்தாள்" - ஏற்ற சமயம் வரும் வரையிலும் எஸ்தர் தன்னுடைய குலத்தைப் பற்றி அறிவிக்கக் கூடாது என்று மொர்தெகாய் திட்டமிட்டிருக்கிறான். (எஸ் 7:3-5). எஸ்தரைப் பெர்சிய தேசத்து கன்னிப் பெண் என்றே மொர்தெகாய் அறிமுகப்படுத்துகிறான். பெர்சியருக்கு யூதர் மீது எந்தவித விரோதமும் இல்லை. எஸ்தருடைய யூதமார்க்கத்துப் பெயர் அத்சாள். இவளுக்கு எஸ்தர் என்னும் பெர்சியப் பெயர் கொடுக்கப்படுகிறது. இதன் மூலமாக இவள் தன்னை யூதஸ்திரீயாகக் காட்டிக் கொள்ளாமல் பெர்சிய தேசத்து ஸ்திரீயாகவே காட்டிக் கொள்கிறாள். தோற்றத்திலும் அழகுள்ளவள். பெர்சிய தேசத்து ஸ்திரீயைப் போலவே இருக்கிறாள். இவளுடைய பெற்றோரும் மரித்துப் போனார்கள். ஆகையினால் தன்னை ஒரு பெர்சிய தேசத்து ஸ்திரீயாகக் காண்பிப்பதில் எஸ்தருக்கு எந்தச் சிரமமும் ஏற்படவில்லை. (எஸ் 2:10-11,20; எஸ் 7:3-5).

"மொர்தெகாய் அதைத் தெரிவிக்க வேண்டாமென்று அவளுக்குக் கற்பித்திருந்தான்" - எஸ்தர் மொர்தெகாயிடத்தில் வளரும்போது அவன் சொற்கேட்டே நடந்தாள். ஆகையினால் அவன் கற்பித்த பிரகாரமாகவே சூசான் அரமனையிலும் எஸ்தர் நடந்து கொள்கிறாள். (எஸ் 2:20).

5. ஒரு வருஷம் ஆயத்தம்

எஸ்தர் 2:12 ஒவ்வொரு பெண்ணும் ஆறுமாதம் வெள்ளைப்போளத் தைலத்தினாலும், ஆறுமாதம் சுகந்த வர்க்கங்களினாலும், ஸ்திரீகளுக்குரிய மற்றச் சுத்திகரிப்புகளினாலும் ஜோடிக்கப் படுகிற நாட்கள் நிறைவேறி, இவ்விதமாய் ஸ்திரீகளின் முறைமைப்படி பன்னிரண்டு மாதமாகச் செய்யப்பட்டுத் தீர்ந்தபின்பு, ராஜாவாகிய அகாஸ்வேருவினிடத்தில் பிரவேசிக்க, அவளவளுடைய முறை வருகிறபோது,

6. எஸ்தரின் அறிமுகம்

எஸ்தர் 2:13 இப்படி ஜோடிக்கப்பட்ட பெண் ராஜாவினிடத்தில் பிரவேசிப்பாள்; கன்னிமாடத்திலிருந்து தன்னோடேகூட ராஜ அரமனைக்குப்போக, அவள் தனக்கு வேண்டுமென்று கேட்பவையெல்லாம் அவளுக்குக் கொடுக்கப்படும்.

எஸ்தர் 2:14 சாயங்காலத்திலே அவள் உள்ளே பிரவேசித்து, காலமே, அபிமான ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய சாஸ்காசுடைய விசாரிப்புக்குள்ளிருக்கிற ஸ்திரீகளின் இரண்டாம் மாடத்துக்குத் திரும்பி வருவாள்; ராஜாதன்னை விரும்பிப் பேர்சொல்லி அழைப்பித்தாலொழிய அவள் ஒருபோதும் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கக்கூடாது.

2 அதிகாரம்

எஸ்தர் 2:15 மொர்தெகாய் தனக்குக் குமாரத்தியாய் ஏற்றுக்கொண்டவளும், அவன் சிறியதகப்பனாகிய அபியாயேலின் குமாரத்தியுமான எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கிறதற்கு முறைவந்தபோது, அவள் ஸ்திரீகளைக் காவல்பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை; எஸ்தருக்குத் தன்னைக்காண்கிற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது.

எஸ்தர் 2:16 அப்படியே எஸ்தர் ராஜாவாகிய அகாஸ்வேரு அரசாளுகிற ஏழாம் வருஷம் தேபேத் மாதமாகிய பத்தாம் மாதத்திலே ராஜாவினிடத்தில் அரமனைக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டாள்.

"யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை" - கன்னி மாடத்தில் இருக்கும் ஸ்திரீகள் தங்களை ஜோடிப்பதற்குப் பல பொருட்களைப் பயன் படுத்துவார்கள். அவர்கள் கேட்பவையெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். எப்படியாவது ராஜாவைப் பிரியப்படுத்த வேண்டுமென்பது அவர்களுடைய எண்ணம். (எஸ் 2:13) ஆனால் எஸ்தரோ யேகாய் பரிந்துரை செய்த பொருட்களை மட்டுமே பயன்படுத்துகிறாள். ஒருவேளை எஸ்தர் தன்னைச் செயற்கையாக அழகுபடுத்தாமல், தன்னுடைய இயற்கை அழகை ராஜாவுக்குக் காண்பித்திருக்கலாம்.

"அகாஸ்வேரு அரசாளுகிற ஏழாம் வருஷம்" - அகாஸ்வேரு ராஜா பெரிய விருந்து செய்து, ராஜஸ்திரீயாகிய வஸ்தியின்மீது கோபப்பட்டு அவளை விலக்கி வைத்து, நான்கு வருஷங்களாயிற்று. (எஸ் 1:3). அகாஸ்வேரு மொத்தம் 35 வருஷங்கள் ஆட்சி புரிந்தான். கோரேசு எஸ்தருக்கும், அகாஸ்வேருக்கும் பிறந்தவன். பாபிலோனைப் பிடிப்பதற்காகக் கோரேசு தன் தந்தையின் படையைப் பயன்படுத்தினான். (தானி 5). பெர்சிய தேசத்தின்மீது கோரேசு ராஜாவாக ஆனபோது, அவனுக்கு 27 வயதாயிற்று. இக்காலத்தில் யூதர்கள் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிப் போகலாம் என்று கோரேசு கட்டளையிட்டான். (ஏசா 44:28-45:1-5,13; ஏசா 46:11; ஏசா 48:14-15)

"தேபேத்" (Tebeth) - பத்தாவது மாதம்.

7. எஸ்தர் இராணியாகிறாள்

எஸ்தர் 2:17 ராஜா சகல ஸ்திரீகளைப் பார்க்கிலும் எஸ்தர்மேல் அன்புவைத்தான்; சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமுகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது; ஆகையால் அவன் ராஜகிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான்.

"அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரீயாக்கினான்" - பெர்சிய தேசத்து ராஜாவிற்கு ஏராளமான மனைவிகள் இருப்பார்கள். அந்த மனைவிகளில் ஒரு மனைவிக்கு உயர்ந்த அந்தஸ்து கொடுக்கப் பட்டு, அவள் "பட்டத்து ஸ்திரீ" என்னும் அந்தஸ்தைப் பெற்றாள். இதுவரையிலும் இந்த அந்தஸ்து வஸ்திக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. இப்போது எஸ்தர் அந்த அந்தஸ்தைப் பெற்றுக் கொள்கிறாள். பட்டத்து ஸ்திரீ மட்டுமே ராஜ வஸ்திரத்தையும், ராணியின் கிரீடத்தையும் அணிய முடியும். ராஜாவின் மற்ற மனைவிமார்கள் எல்லோரும் பட்டத்து ஸ்திரீயை மதிக்க வேண்டும். ராஜா தன்னுடைய பிரதானிகளுக்கு விருந்து செய்யும் போது பட்டத்து ராணியும் தனக்கு வேண்டிய ஸ்திரீகளுக்கு விருந்து செய்வது வழக்கம். பட்டத்து ஸ்திரீக்கு மிகப்பெரிய அரமனை கொடுக்கப்பட்டிருக்கும். பட்டத்து ஸ்திரீ விரும்பும் ஆடை அணிகலன்களெல்லாம் அவளுக்குக் கொடுக்கப்படும்.

8. எஸ்தரின் திருமண விருந்து

எஸ்தர் 2:18 அப்பொழுது ராஜா தன்னுடைய எல்லாப் பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும், எஸ்தரினிமித்தம் ஒரு பெரிய விருந்துசெய்து, நாடுகளுக்குச் சலக்கரணை உண்டாக்கி, ராஜஸ்திதிக்குத் தக்க வெகுமானங்களைக் கொடுத்தான்.

2 அதிகாரம்

எஸ்தர் 2:19 இரண்டாந்தரம் கன்னிகைகள் சேர்க்கப்படும்போது, மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருந்தான்.

எஸ்தர் 2:20 எஸ்தர் மொர்தெகாய் தனக்குக் கற்பித்திருந்தபடி, தன் பூர்வோத்தரத்தையும் தன் குலத்தையும் தெரிவிக்காதிருந்தாள்; எஸ்தர் மொர்தெகாய் இடத்திலே வளரும்போது அவன் சொற்கேட்டு நடந்ததுபோல, இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்துவந்தாள்.

"எஸ்தரினிமித்தம் ஒரு பெரிய விருந்து செய்து" - எஸ்தர் பட்டத்து ஸ்திரீயானதினிமித்தம் அகாஸ்வேரு ஒரு விருந்து பண்ணுகிறான். தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் சலக்கரணை உண்டாக்குகிறான். மேலும் தன்னுடைய ராஜஸ்திதிக்குத்தக்க வெகுமானங்களைக் கொடுக்கிறான். (எஸ் 2:18-20).

"மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருந்தான்" - மொர்தெகாய் சூசான் அரமனையில் சேவகனாக வேலைபார்த்துக் கொண்டிருக்கிறான். இதனால் எஸ்தருடைய காரியங்களையும் அவனால் கவனித்துக் கொள்ள முடிகிறது. தன்னுடைய யூத ஜனங்களைப் பற்றிய நினைவு மொர்தெகாயின் உள்ளத்தில் உள்ளது. ராஜாவின் அரமனை வாசலில் மொர்தெகாய் இருந்ததினால் ஏற்ற சமயத்தில் எஸ்தருக்கு ஆலோசனைகளைக் கூறுகிறான்.

9. மொர்தெகாய் இராஜாவின் உயிரைத் தற்செயலாகக் காப்பாற்றுகிறான்

எஸ்தர் 2:21 அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறபோது, வாசல்காக்கிற ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானும் தேரேசும் வர்மம் வைத்து, ராஜாவாகிய அகாஸ்வேருவின்மேல் கைபோட வகைதேடினார்கள்.

எஸ்தர் 2:22 இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரியவந்ததினால், அவன் அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான்; எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள்.

எஸ்தர் 2:23 அந்தக் காரியம் விசாரிக்கப் படுகிறபோது, அது மெய்யென்று காணப்பட்டது; ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப்போடப் பட்டார்கள்; இது ராஜ சமுகத்திலே நாளாகமப்புஸ்தகத்திலே எழுதப் பட்டிருக்கிறது.

"அந்நாட்களில் மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறபோது" - எஸ்தர் பட்டத்து ஸ்திரீயாக அரமனையில் இருக்கிறாள். அப்போது ராஜாவின் இரண்டு பிரதானிகள் அகாஸ்வேருவின்மேல் கைபோட வகைதேடினார்கள். இந்தக் காரியம் மொர்தெகாய்க்குத் தெரியவருகிறது. அதை ராஜாத்தியாகிய எஸ்தருக்கு அறிவித்தான். ராஜாவுக்கு இந்தச் சதிச்செயல் தெரிய வந்தபோது, அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப்போடப்பட்டார்கள். இந்தச் சம்பவம் பெர்சிய ராஜாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது. (எஸ் 2:21- 23).

"எஸ்தர் மொர்தெகாயின் பேரால் அதை ராஜாவுக்குச் சொன்னாள்" - எஸ்தர் மிகவும் ஞானமாகச் செயல்படுகிறாள். ராஜாவுக்கு எதிரான சதித்திட்டத்தைத் தன்னுடைய செய்தியாகக் கூறுவதற்குப் பதிலாக அதை மொர்தெகாயின் பேரால் கூறுகிறாள். இந்தச் சம்பவம் யூதருடைய சரித்திரத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. ஆயிரக்கணக்கான யூதர்களின் உயிர்கள் காப்பாற்றப்படுவதற்கு இந்தச் சம்பவம் பிற்காலத்தில் ஒரு முக்கியமான கருவியாயிற்று. (எஸ் 4:4-6:14).

3 அதிகாரம்

III. யூதருக்கு எதிராக ஆமோனின் சதித்திட்டம்

1. ஆமானின் உயர்வு

எஸ்தர் 3:1 இந்த நடபடிகளுக்குப்பின்பு, ராஜாவாகிய அகாஸ்வேரு அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியனை மேன்மைப்படுத்தி, தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் மேலாக அவனுடைய ஆசனத்தை உயர்த்திவைத்தான்.

எஸ்தர் 3:2 ஆகையால் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாரும் ஆமானை வணங்கி நமஸ்கரித்து வந்தார்கள்; அவனுக்கு இப்படிச் செய்யவேண்டும் என்று ராஜா கட்டளையிட்டிருந்தான்; ஆனாலும் மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை.

“இந்த நடபடிகளுக்குப்பின்பு” - எஸ்தர் பட்டத்து ஸ்திரீயாக்கப்பட்டு ஐந்து வருஷங்களுக்குப் பின்பு. அகாஸ்வேரு ராஜாவின் அரமனையில் ஆமான் என்பவன் பிரபுவாக இருக்கிறான். ராஜா இவனை மேன்மைப்படுத்தி எல்லாப் பிரபுக்களுக்கும் மேலாக இவனுடைய ஆசனத்தை உயர்த்தி வைத்தான்.

“ஆமான்” **(Haman)** - இந்தப் பெயருக்கு “நல்ல ஒழுங்கு” **“well-disposed”** என்று பொருள். இவன் ஒரு ஆகாகியன். அமலேக்கியரின் சந்ததியில் வந்திருக்கிறவன். எஸ்தர் புஸ்தகத்தில் 53 தடவை இவனுடைய பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (எஸ் 3:1-9:24). இவன் யூதரை வெறுத்தான். மற்ற எல்லோரையும்விட தனக்கு மதிப்பும், மரியாதையும் அதிகமாகக் கிடைக்க வேண்டுமென்று விரும்பினான். இவனுடைய பேராசையே இவனுடைய அழிவிற்குக் காரணமாயிற்று. இவனால் இவனுடைய குடும்பத்தாரும் அழிந்தார்கள்.

“மொர்தெகாய் அவனை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை” - ஆமானுடைய வாழ்வில் மொர்தெகாய் ஒரு முள்ளாக இருக்கிறான். கர்த்தர் ஆமானைச் சபித்திருக்கிறார். (யாத் 17:14-16). கர்த்தரால் சபிக்கப்பட்டவனை மொர்தெகாய் வணங்கவோ, நமஸ்கரிக்கவோ விரும்பவில்லை.

2. ஆமானின் சரீரத்தில் ஒருமுள்

எஸ்தர் 3:3 அப்பொழுது ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் மொர்தெகாயைப் பார்த்து: நீ ராஜாவின் கட்டளையை மீறுகிறது என்ன என்று கேட்டார்கள்.

எஸ்தர் 3:4 இப்படி அவர்கள் நாளுக்குநாள் அவனுடனே சொல்லியும், அவன் தங்களுக்குச் செவிகொடாத போது, தான் யூதன் என்று அவன் அவர்களுக்கு அறிவித்திருந்தபடியால், மொர்தெகாயின் சொற்கள் நிலைநிற்குமோ என்று பார்க்கிறதற்கு, அதை ஆமானுக்கு அறிவித்தார்கள்.

எஸ்தர் 3:5 ஆமான் மொர்தெகாய் தன்னை வணங்கி நமஸ்கரியாததைக் கண்டபோது, மூர்க்கம் நிறைந்தவனானான்.

“அதை ஆமானுக்கு அறிவித்தார்கள்” - ராஜாவின் அரமனை வாசலில் ராஜாவின் ஊழியக்காரர்கள் இருக்கிறார்கள். மொர்தெகாய் ஆமானுக்கு எழுந்து, மரியாதை செய்யாததை இவர்கள் ஆமானுக்கு அறிவிக்கிறார்கள். ஒருவேளை ஆமானிடத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்பதற்காக இவர்கள் மொர்தெகாயைப் பற்றிப் பேசியிருக்கலாம். மொர்தெகாயின் செயலினால் ஆமானுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. இதனால் கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜாதியாகிய யூதஜனமே அழிந்து போகக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று.

“மூர்க்கம் நிறைந்தவனானான்” - ஒரு யூதன் தன்னை வணங்கி நமஸ்கரிக்கவில்லை என்பது ஆமானுக்கு மிகவும் மனக்கஷ்டமாக இருக்கிறது. தினமும் ஆமான் மொர்தெகாயைக் கவனித்துப் பார்க்கிறான். மொர்தெகாயின் செயல் ஆமானுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கிற்று. இதனால் யூதர்கள் அனைவரையும் அழித்துப் போடுவதற்கு ஆமான் சதி பண்ணுகிறான். (எஸ் 3:5-9).

3 அதிகாரம்

3. மொர்தெகாயின் நிமித்தமாக ஆமான் எல்லா யூதரையும் அழிக்க வேண்டும் என்று சதி பண்ணுகிறான்

எஸ்தர் 3:6 ஆனாலும் மொர்தெகாயின் மேலமாத்திரம் கைபோடுவது அவனுக்கு அற்பக்காரியமாகக் கண்டது; மொர்தெகாயின் ஜனங்கள் இன்னாரென்று ஆமானுக்கு அறிவிக்கப் பட்டிருந்தபடியால், அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்.

எஸ்தர் 3:7 ராஜாவாகிய அகாஸ்வேருவின் பன்னிரண்டாம் வருஷம் நிசான் மாதமாகிய முதலாம் மாதத்திலே ஆமானுக்கு முன்பாகப் பூர் என்னப்பட்டசீட்டு ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு மாதத்தையும் குறித்துப் போடப்பட்டு, ஆதார்மாதமான பன்னிரண்டாம் மாதத்தின்மேல் விழுந்தது.

எஸ்தர் 3:8 அப்பொழுது ஆமான் அகாஸ்வேரு ராஜாவை நோக்கி: உம்முடைய ராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள்; அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது; அவர்கள் ராஜாவின் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறதில்லை; ஆகையால் அவர்களை இப்படி விட்டிருக்கிறது ராஜாவுக்கு நியாயமல்ல.

எஸ்தர் 3:9 ராஜாவுக்குச் சம்மதியானால், அவர்களை அழிக்கவேண்டுமென்று எழுதி அனுப்பவேண்டியது; அப்பொழுது நான் ராஜாவின் கஜானாவிலே கொண்டுவந்து செலுத்த பதினாயிரம் தாலந்து வெள்ளியை எண்ணிக் காரியக்காரர் கையில் கொடுப்பேன் என்றான்.

"மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க அவன் வகைதேடினான்." - யூதருடைய சந்ததியிலிருந்து மேசியா வருவார் என்பது கர்த்தருடைய திட்டம். சாத்தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த விடாமல் தடுப்பதற்கு முயற்சி பண்ணுகிறான். எல்லா யூதரையும் அழித்துப் போடுவதற்கு சாத்தான் பல வழிகளிலும் சூழ்ச்சி பண்ணுகிறான்.

"பூர் என்னப்பட்ட சீட்டு" - பூர் என்பது சீட்டு என்பதைக் குறிக்கும் பெர்சிய வார்த்தையாகும். எல்லா யூதரையும் அழித்துப் போடுவதற்காக ஆமான் ஒரு நாளைத் தெரிந்தெடுக்க விரும்புகிறான். இதற்காகவே அவன் பூர் என்னப்பட்ட சீட்டைப் போடுகிறான். முதலாம் மாதம் 13 ஆம் தேதி யூதர்கள் எல்லோரையும் அழிப்பதற்கு நல்ல நாள் என்று ஆமான் தீர்மானம் பண்ணுகிறான். (எஸ் 3:7,12). ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசி காண்கிறவர்களும் இதுபோல சீட்டுப் போட்டு நாள் பார்ப்பது வழக்கம். (ஏசா 47:13)

"உம்முடைய ராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள்" - ஆமான் அகாஸ்வேரு ராஜாவிடம் யூத ஜாதியாரைக் குறித்து குற்றம் சுமத்துகிறான். அவர்கள் எல்லோரையும் அழித்துப் போடுவதற்கு ராஜாவின் அனுமதியையும் பெற்றுக் கொள்கிறான். (எஸ் 3:9-15).

ஆமான் யூதருக்கு விரோதமாகக் கூறிய குற்றச்சாட்டுக்கள்

1. அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாயிருக்கிறது.
2. அவர்கள் ராஜாவின் சட்டங்களைக் கைக்கொள்ளுகிறதில்லை.
3. ஆகையால் அவர்களை இப்படி விட்டிருக்கிறது ராஜாவுக்கு நியாயமல்ல.
4. அவர்களை அழிப்பதற்காக பதினாயிரம் தாலந்து வெள்ளி ராஜாவின் கஜானாவில் சேர்க்கப்படும். (எஸ் 3:9).

3 அதிகாரம்

4. ஆமானின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது

எஸ்தர் 3:10 அப்பொழுது ராஜா தன் கையிலிருக்கிற தன் மோதிரத்தைக் கழற்றி, அதை ஆகாகியனான அம்மெதாத்தாவின் குமாரனும் யூதரின் சத்துருவுமாகிய ஆமானிடத்தில் கொடுத்து,

எஸ்தர் 3:11 ஆமானை நோக்கி: அந்த வெள்ளியை நீ வைத்துக்கொள்; அந்த ஜனத்துக்கு உன் இஷ்டப்படி செய்யலாம் என்றான்.

"ராஜா தன் கையிலிருக்கிற தன் மோதிரத்தைக் கழற்றி" - ராஜாவுக்கு ஆமானின் சதித்திட்டம் தெரியவில்லை. ஆமானை ராஜா முழுவதுமாக நம்புகிறார். தன்னுடைய தேசத்திலுள்ள எல்லா யூதரையும் அழித்துப் போடுவதற்கு ராஜா ஆமானுக்கு அனுமதி கொடுக்கிறார். அதற்கு அடையாளமாக ராஜ தன் கையிலிருக்கிற தன் மோதிரத்தைக் கழற்றி ஆமானிடம் கொடுக்கிறார். (எஸ் 3:10-15). ஆமான் கொடுப்பதாகச் சொன்ன பதினாயிரம் தாலந்து வெள்ளியையும் ராஜா ஆமானுக்கே கொடுத்து, யூதர்களை அழித்துப் போடுமாறு கட்டளையிடுகிறார்.

5. எல்லா யூதர்களையும் அழிக்குமாறு இராஜாவின் கட்டளை

எஸ்தர் 3:12 முதலாம் மாதம் பதின்மூன்றாந்தேதியிலே, ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள்; ஆமான் கற்பித்தபடியெல்லாம் ராஜாவின் தேசாதிபதிகளுக்கும், ஒவ்வொரு நாட்டின்மேல் வைக்கப்பட்டிருந்த துரைகளுக்கும், ஒவ்வொரு ஜனத்தின் பிரபுக்களுக்கும், அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும் எழுதப்பட்டது; ராஜாவாகிய அகாஸ்வேருவின் பேரால் அது எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டது.

எஸ்தர் 3:13 ஆதார் மாதமான பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியாகிய ஒரே நாளிலே சிறியோர் பெரியோர் குழந்தைகள் ஸ்திரீகள் ஆகிய சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்களைக் கொள்ளையிடவும், அஞ்சற்காரர் கையிலே ராஜாவின் நாடுகளுக்கெல்லாம் கட்டளைகள் அனுப்பப்பட்டது.

எஸ்தர் 3:14 அந்த நாளுக்கு ஆயத்தப் பட்டிருக்கவேண்டும் என்று சகல ஜனங்களுக்கும் கூறி அறிவிக்கிறதற்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையின் நகல் இதுவே, இது ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம்பண்ணப் பட்டது.

எஸ்தர் 3:15 அந்த அஞ்சற்காரர் ராஜாவின் உத்தரவினால் தீவிரமாய்ப் புறப்பட்டுப்போனார்கள்; அந்தக் கட்டளை சூசான் அரமனையில் பிறந்தது. ராஜாவும் ஆமானும் குடிக்கும்படி உட்கார்ந்தார்கள்; சூசான் நகரம் கலங்கிற்று.

"முதலாம் மாதம் பதின்மூன்றாந்தேதியிலே" - முதலாம் மாதம் என்பது நிசான் மாதம் என்பதாகும். இந்த மாதம் 14 ஆம் தேதியில் யூதர்கள் பஸ்கா பண்டிகையை ஆசரிப்பது வழக்கம். பஸ்கா பண்டிகைக்கு முந்திய நாளாகிய 13 ஆம் தேதியில் ஆமான் யூதர்களையெல்லாம் அழித்துப் போட திட்டம் பண்ணி, ராஜாவின் சம்பிரதிகளையெல்லாம் தன்னிடத்தில் அழைக்கிறான். ஆதார் மாதம் 12 ஆம் தேதியிலே சகல யூதரையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும் அவர்களைக் கொள்ளையிடவும் அகாஸ்வேரு ராஜாவின் ஆளுகைக்குட்பட்ட எல்லா நாடுகளுக்கும் ஆமான் கட்டளை அனுப்புகிறான். (எஸ் 3:12-15).

"ராஜாவும் ஆமானும் குடிக்கும்படி உட்கார்ந்தார்கள்; சூசான் நகரம் கலங்கிற்று" - யூதர்களையெல்லாம் அழித்துப் போட வேண்டுமென்று கட்டளையிட்ட பின்பு, ராஜாவும், ஆமானும் அந்தச் சந்தோஷத்தைக் கொண்டாடுவதற்காகக் குடிக்கும்படி உட்காருகிறார்கள். ஆனால் சூசான் நகரத்திலுள்ள ஜனங்களோ ராஜாவின் கட்டளையைக் கேட்டு கலங்குகிறார்கள்.

4. அதிகாரம்

IV. **ஆமானின் சதித்திட்டத்தினால் குழப்பங்கள்** - *(4:1-7:10)*

1. யூதர்களுக்கு மத்தியில் ஜெபமும் உபவாசமும்

எஸ்தர் 4:1 நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்தபோது, மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக்கொண்டு, நகரத்தின் நடுவே புறப்பட்டுப்போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறிக்கொண்டு,

எஸ்தர் 4:2 ராஜாவின் அரமனை வாசல் முகப்பு மட்டும் வந்தான்; இரட்டுடுத்தினவனாய் ராஜாவின் அரமனை வாசலுக்குள் பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை.

எஸ்தர் 4:3 ராஜாவின் உத்தரவும், அவனுடைய கட்டளையும் போய்ச் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் ஸ்தலத்திலுமுள்ள யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாய், அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள்.

"மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பல் போட்டுக் கொண்டு" - மொர்தெகாய் கர்த்தரிடத்தில் விசுவாசமாக இருக்கிறவன். தனக்கும், தன்னுடைய யூதஜாதியாருக்கும் உபத்திரவம் வருகிறபோது அவன் உபவாசம் பண்ணி ஜெபிக்கிறான். நகரத்தின் நடுவே புறப்பட்டுப் போய், துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறுகிறான். ராஜாவின் வாசலுக்குள் யாரும் இரட்டுடுத்தினவனாய் பிரவேசிக்கக் கூடாது. ஆனாலும் மொர்தெகாய் அந்தக் கட்டளையையும் மீறி, நகரத்தின் நடுவே இரட்டுடுத்திப் பிரவேசிக்கிறான். (எஸ் 4:1-2). அகாஸ்வேரு ராஜாவின் பெர்சிய நாட்டில் யூதருக்குள்ளே மகா துக்கமும், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாயிற்று. அநேகர் இரட்டுடுத்திச் சாம்பலில் கிடந்தார்கள். (எஸ் 4:3).

"ராஜாவின் உத்தரவு" - அகாஸ்வேரு ராஜாவின் ஒவ்வொரு நாட்டிற்கும் ராஜாவின் உத்தரவு வருகிறது. ஆதார் மாதம் 13 ஆம் தேதியிலே யூதர்கள் எல்லோரும் கொல்லப்படுவார்கள். இந்தச் செய்தியைக் கேட்ட யூதர்கள் அனைவரும் கலங்கி, புலம்பி, கர்த்தருடைய சமுகத்தில் ஜெபிக்கிறார்கள். (எஸ் 3:13).

ராஜாவின் உத்தரவு யூதருக்குள் ஏற்படுத்தின விளைவு

1. மகா துக்கம்
2. உபவாசம்
3. அழுகை
4. புலம்பல்

2. எஸ்தர் மொர்தெகாயிடம் அவனுடைய கவலையைக் குறித்து விசாரிக்கிறாள்

எஸ்தர் 4:4 அப்பொழுது எஸ்தரின் தாதிமார்களும், அவளுடைய பிரதானிகளும்போய், அதை அவளுக்கு அறிவித்தார்கள்; அதினாலே ராஜாத்தி மிகவும் துக்கப்பட்டு, மொர்தெகாய் உடுத்திருந்த இரட்டை எடுத்துப்போட்டு, அவனை உடுத்துவிக்கிறதற்கு வஸ்திரங்களை அனுப்பினாள்; அவனோ அவைகளை ஏற்றுக்கொள்ளாதிருந்தான்.

எஸ்தர் 4:5 அப்பொழுது எஸ்தர் தன் பணிவிடைக்கென்று ராஜாவினால் நியமித்திருந்த அவனுடைய பிரதானிகளில் ஒருவனாகிய ஆத்தாகை அழைப்பித்து: காரியம் என்ன? அதின் முகாந்தரம் என்ன? என்று அறியும்படி, மொர்தெகாயினிடத்தில் விசாரிக்க அவனுக்குக் கட்டளையிட்டாள்.

எஸ்தர் 4:6 அப்படியே ஆத்தாகு ராஜாவின் அரமனை வாசலுக்கு முன்னான பட்டண வீதியிலிருக்கிற மொர்தெகாயினிடத்தில் புறப்பட்டுப் போனான்.

4 அதிகாரம்

"எஸ்தரின் தாதிமார்களும், அவளுடைய பிரதானிகளும்" - ராஜாவின் வாசலுக்கு முன்பாக மொர்தெகாய் இரட்டுடுத்தி அழுது கொண்டு போகிறான். இது சட்டத்திற்குப் புறம்பான செயல். இதை எஸ்தரின் தாதிமார்களும், அவளுடைய பிரதானிகளும் எஸ்தரிடத்தில் அறிவிக்கிறார்கள். (எஸ் 4:1-4). எஸ்தருக்கு அரமனைக்கு வெளியே நடக்கும் சம்பவம் எதுவும் தெரியவில்லை. அவள் பட்டத்து ஸ்திரீயாக இருப்பதினால் ராஜாவின் அரமனையிலேயே இருக்கிறாள். மொர்தெகாயின் அழுகையையும், அவன் இரட்டுடுத்தி ராஜாவின் அரமனை வாசலில் நடப்பதையும் எஸ்தருக்கு அறிவிக்கிறார்கள். ஏனெனில் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கும் மொர்தெகாய்க்கு, ராஜாவின் உத்தரவுப்படி நிச்சயமாகத் தண்டனை கிடைக்கும். மொர்தெகாயின் செயலைப் பற்றிக் கேள்விப்பட்டபோது எஸ்தர் மிகவும் துக்கமடைகிறாள்.

"அதினாலே ராஜாத்தி மிகவும் துக்கப்பட்டு" - மொர்தெகாய் ஏன் இரட்டுடுத்தியிருக்கிறான் என்பது எஸ்தருக்குத் தெரியாது. அவன் அழுவதை நினைத்தும், அவனுக்கு வரப்போகிற தண்டனையையும் நினைத்தும் எஸ்தர் மிகவும் துக்கப்படுகிறாள். அவளுக்கு நல்ல வஸ்திரங்களை அனுப்புகிறாள். ஆனால் மொர்தெகாயோ அந்த வஸ்திரங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. யூதஜனத்திற்கு இக்கட்டான சூழ்நிலை வந்திருக்கும் போது, எஸ்தர் தன்னுடைய இரட்டை மட்டும் களைந்து போட்டால் போதாது. எல்லா யூதருடைய கண்ணீரையும் துடைப்பதற்கு எஸ்தர் அதற்குரிய காரியத்தைச் செய்ய வேண்டுமென்று மொர்தெகாய் நினைக்கிறான். நல்ல வஸ்திரத்தை மொர்தெகாய் வாங்க மறுத்ததினால், ஆத்தாகு என்பவனை அனுப்பி, அவனுடைய துக்கத்திற்குக் காரணம் என்ன என்பதை விசாரித்து வரச்சொல்லுகிறாள். (எஸ் 4:5-6).

3. யூதர்களின் பிரச்சனையை மொர்தெகாய் எஸ்தரிடம் கூறுகிறான்

எஸ்தர் 4:7 அப்பொழுது மொர்தெகாய் தனக்குச் சம்பவித்த எல்லாவற்றைப் பற்றியும், யூதரை அழிக்கும்படி ஆமான் ராஜாவின் கஜானாவுக்கு எண்ணிக் கொடுப்பேன் என்று சொன்ன பணத்தொகையைப் பற்றியும் அவனுக்கு அறிவித்ததும் அன்றி,

எஸ்தர் 4:8 யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் அவனிடத்தில் கொடுத்து, அதை எஸ்தருக்குக் காண்பித்துத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்தில் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச்சொன்னான்.

எஸ்தர் 4:9 ஆத்தாகு வந்து, மொர்தெகாயின் வார்த்தைகளை எஸ்தருக்கு அறிவித்தான்.

மொர்தெகாய் எஸ்தருக்குக் கூறிய செய்திகள்

1. மொர்தெகாய் தனக்குச் சம்பவித்த எல்லாவற்றைப்பற்றியும் கூறுகிறான்.
2. யூதரை அழிக்கும்படி ஆமான் ராஜாவின் கஜானாவுக்கு எண்ணிக்கொடுப்பேன் என்று சொன்ன பணத்தொகையைப் பற்றியும் கூறுகிறான்.
3. யூதர்களை அழிக்கும்படி சூசானில் பிறந்த கட்டளையின் நகலையும் எஸ்தருக்குக் கொடுத்து அனுப்புகிறான். (எஸ் 4:8).
4. எஸ்தர் அகத்தியமாய் ராஜாவினிடத்தில் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணவும் மன்றாடவும் வேண்டுமென்று எஸ்தருக்குச் செய்தி அனுப்புகிறான்.

எஸ்தர் – தொகுப்புரை

4 அதிகாரம்

"தன் ஜனங்களுக்காக" - எஸ்தர் ஒரு யூத ஸ்திரீ என்பது அகாஸ்வேரு ராஜாவிற்கு இதுவரையிலும் தெரியாது. இந்த விவரம் தெரியாமலேயே ராஜா தன்னுடைய பட்டத்து ஸ்திரீயாகிய எஸ்தரையும் கொன்று போடுவதற்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறான்.

4. இராஜாவைச் சந்திப்பதில் எஸ்தரின் பிரச்சனை

எஸ்தர் 4:10 அப்பொழுது எஸ்தர் ஆத்தாகினிடத்தில் மொர்தெகாய்க்குச் சொல்லியனுப்பினது:

எஸ்தர் 4:11 யாராவது அழைக்கப்படாமல், உள்முற்றத்தில் ராஜாவினிடத்தில் பிரவேசித்தால், புருஷரானாலும் ஸ்திரீயானாலும் சரி, அவர்கள் பிழைக்கும்படிக்கு அவர்களுக்கு ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய மற்றப்படி சாகவேண்டும் என்கிற ஒரு தவறாத சட்டமுண்டு, இது ராஜாவின் சகல ஊழியக்காரருக்கும், ராஜாவினுடைய நாடுகளிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரியும்; நான் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப் படவில்லை என்று சொல்லச்சொன்னாள்.

எஸ்தர் 4:12 எஸ்தரின் வார்த்தைகளை மொர்தெகாய்க்குத் தெரிவித்தார்கள்.

எஸ்தர் ஆத்தாகினிடத்தில் மொர்தெகாய்க்குச் சொல்லியனுப்பினது

1. யாராவது அழைக்கப்படாமல், ராஜாவினிடத்தில் பிரவேசிக்கக்கூடாது.
2. அப்படி பிரவேசித்தால், ராஜா பொற்செங்கோலை நீட்டினாலொழிய மற்றப்படி அவர்கள் சாகவேண்டும்.
3. எஸ்தர் இந்த முப்பது நாளளவும் ராஜாவினிடத்தில் வரவழைப்பிக்கப் படவில்லை (எஸ் 4:10-12).

பெர்சிய அரமனையின் சட்டத்தை யாரும் மாற்ற முடியாது. ராஜா அழைக்காமல், அவரைப் போய் பார்ப்பதே பெரிய குற்றமாகக் கருதப்பட்டது. அவ்வாறு ராஜ அரமனைக்குள் போகிறவர்களை அவனுடைய ஊழியக்காரர்களே கொன்றுபோடுவார்கள். ராஜா தன்னுடைய செங்கோலை நீட்டினால் மாத்திரமே அவன் பிழைக்க முடியும். ஆகையினால் மொர்தெகாய் எஸ்தரிடம் கூறும் காரியம் அவளுடைய மரணத்திற்கு ஏதுவாக இருக்கிறது. எஸ்தர் தன்னுடைய ஜீவனைப் பணையம் வைத்துதான் அவளால் ராஜாவைப் பார்க்க முடியும்.

5. எஸ்தருக்கு மொர்தெகாயின் கட்டளை

எஸ்தர் 4:13 மொர்தெகாய் எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச்சொன்னது: நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவுகொள்ளாதே.

எஸ்தர் 4:14 நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும், என்று சொல்லச் சொன்னான்.

"மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே" - எஸ்தர் ராஜாவைப் பார்த்து, அவர் போட்ட ஆணையை மாற்றவில்லை என்றால், அந்த ஆணையின் நிமித்தமாக எல்லா யூதரும் செத்துப்போவார்கள். எஸ்தரும் யூத ஸ்திரீயாக இருப்பதினால் அவளும் மரிக்க வேண்டியது வரும் என்று மொர்தெகாய் நினைவுகூருகிறான். இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும் என்று மொர்தெகாய் கர்த்தரிடத்தில் உள்ள தன்னுடைய விசுவாசத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். அதுமட்டுமல்லாமல் எஸ்தருக்குக் கர்த்தருடைய கிருபையினாலேயே ராஜமேன்மை கிடைத்திருப்பதையும் நினைவு படுத்துகிறான். (எஸ் 4:13-14).

4 அதிகாரம்

6. தன்னுடைய ஜனங்களுக்காக எல்லா ஆபத்தையும் சந்திக்க எஸ்தரின் தீர்மானம்

எஸ்தர் 4:15 அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச் சொன்னது:

எஸ்தர் 4:16 நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்றுநாள் அல்லும்பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம்பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்.

எஸ்தர் 4:17 அப்பொழுது மொர்தெகாய் புறப்பட்டுபோய், எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்.

எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச்சொன்னது

1. சூசானில் இருக்கிற யூதரெல்லாம் மூன்றுநாள் எஸ்தருக்காக உபவாசம் பண்ண வேண்டும்.
2. எஸ்தரும், அவளுடைய தாதிமாரும் உபவாசம் பண்ணுவார்கள்.
3. சட்டத்தை மீறி, எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிப்பாள்.
4. தேவைப்பட்டால் எஸ்தர் மரிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறாள். (எஸ் 4:15-16).

"அல்லும்பகலும்" - யூதருடைய ஒரு நாள் என்பது சூரியன் மறைவதிலிருந்து, மறுநாள் மறைவது வரையிலும் கணக்கிடப்படும். இங்கு அல்லும்பகலும் என்பது இடைவிடாத உபவாசத்தைக் குறிக்கும். (யோனா 1:17; மத் 12:40).

"எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் செய்தான்" - மொர்தெகாய் சூசானிலிருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்கிறான். எல்லோரும் மூன்றுநாள் அல்லும்பகலும் எஸ்தருக்காக உபவாசம்பண்ணி ஜெபிக்கிறார்கள். ராஜாவின் உள்ளத்தைக் கர்த்தர் தொடவேண்டுமென்றும், எஸ்தரும், யூதஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றும் எல்லோரும் ஜெபிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டு அவர்கள் அனைவரையும் இரட்சித்தார்.

எஸ்தர் – தொகுப்புரை

5 அதிகாரம்

7. எஸ்தரின் தைரியம்

எஸ்தர் 5:1 மூன்றாம் நாளிலே எஸ்தர் ராஜவஸ்திரந் தரித்துக்கொண்டு, ராஜ அரமனையின் உள்முற்றத்தில், ராஜா கொலுவிருக்கும் ஸ்தானத்துக்கு எதிராக வந்து நின்றாள்; ராஜா அரமனை வாசலுக்கு எதிரான கொலுமண்டபத்தில் ராஜாசனத்திலே வீற்றிருந்தான்.

எஸ்தர் 5:2 ராஜா ராஜஸ்திரீயாகிய எஸ்தர் முற்றத்தில் நிற்கிறதைக் கண்டபோது, அவளுக்கு அவன் கண்களில் தயை கிடைத்ததினால், ராஜா தன் கையிலிருக்கிற பொற்செங்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டினான்; அப்பொழுது எஸ்தர் கிட்டவந்து செங்கோலின் நுனியைத் தொட்டாள்.

"மூன்றாம் நாளிலே எஸ்தர் ராஜவஸ்திரந் தரித்துக்கொண்டு" - மூன்று நாள் உபவாசம் நடைபெறுகிறது. ராஜா கொலுமண்டபத்தில் ராஜாசனத்திலே வீற்றிருக்கிறான். எஸ்தர் ராஜவஸ்திரம் தரித்துக் கொண்டு ராஜாவுக்கு முன்பாக வந்து நிற்கிறாள். ராஜாவின் கண்களில் எஸ்தருக்குத் தயை கிடைக்கிறது. அதனால் ராஜா தன் கையிலிருக்கிற பொற்செங்கோலை எஸ்தரிடத்திற்கு நீட்டுகிறான். எஸ்தரின் விண்ணப்பம் எதுவானாலும் அது அவளுக்குக் கொடுக்கப்படும் என்று ராஜா வாக்குப்பண்ணுகிறான். (எஸ் 5:1-5). எஸ்தருக்கு இந்தத் திட்டத்திற்கான ஞானம் எப்படி கிடைத்தது என்று தெரியவில்லை. ஒருவேளை மொர்தெகாயின் மூலமாகவோ, அல்லது தெய்வீக ஏவுதலினாலோ எஸ்தர் இவ்வாறு திட்டமிட்டுச் செயல்படுகிறாள். எஸ்தர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளின் நன்மைக்காகச் செய்து முடிக்கிறார். (எஸ் 5:5- 7:10).

8. எஸ்தரின் விருந்தும் இராஜாவிடம் அவளுடைய விண்ணப்பமும்

எஸ்தர் 5:3 ராஜா அவளை நோக்கி: எஸ்தர் ராஜாத்தியே, உனக்கு என்ன வேண்டும்? நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும், உனக்குக் கொடுக்கப்படும் என்றான்.

எஸ்தர் 5:4 அப்பொழுது எஸ்தர்: ராஜாவுக்குச் சித்தமானால், நான் தமக்குச் செய்வித்த விருந்துக்கு ராஜாவும் ஆமானும் இன்றைக்கு வரவேண்டும் என்றாள்.

எஸ்தர் 5:5 அப்பொழுது ராஜா எஸ்தர் சொற்படி செய்ய, ஆமானைத் தீவிரித்து வரும்படி சொல்லி, எஸ்தர் செய்த விருந்துக்கு ராஜாவும் ஆமானும் வந்தார்கள்.

எஸ்தர் 5:6 விருந்திலே திராட்சரசம் பரிமாறப்படுகையில், ராஜா எஸ்தரைப் பார்த்து: உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும்; நீ கேட்கிறது என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான்.

எஸ்தர் 5:7 அதற்கு எஸ்தர் பிரதியுத்தரமாக:

எஸ்தர் 5:8 ராஜாவின் கண்களில் எனக்குக் கிருபைகிடைத்து, என் வேண்டுதலைக் கட்டளையிடவும், என் விண்ணப்பத்தின்படி செய்யவும், ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், ராஜாவும்

ஆமானும் நான் இன்னும் தங்களுக்குச் செய்யப்போகிற விருந்துக்கு வரவேண்டும் என்பதே என் வேண்டுதலும் என் விண்ணப்பமுமாயிருக்கிறது; நாளைக்கு ராஜாவின் சொற்படி செய்வேன் என்றாள்.

"நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும், உனக்குக் கொடுக்கப்படும்" - தன்னிடத்தில் யாராவது ஏதாவது உதவி கேட்டு வந்தால், ராஜா இவ்வாறு கூறுவது வழக்கம். ஏரோது ராஜா தன்னுடைய மகளுக்கும் இதுபோலவே கூறினான். (மாற்கு 6:23; 1இராஜா 13:8).

5 அதிகாரம்

"ராஜாவும் ஆமானும் இன்றைக்கு வரவேண்டும்" - எபிரெய பாஷையில் எழுதப் பட்டிருக்கும் இந்த வாக்கியத்தில் "யெகோவா" என்னும் பெயருக்கான எழுத்துக்கள் உள்ளன. யூதருடைய வரலாற்றில் இந்தச் சம்பவம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அழிவுக்கு நியமிக்கப்பட்டிருந்த யூதர்கள் இந்த விருந்துக்குப் பின்பு இரட்சிக்கப்படுகிறார்கள்.

"உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும்" - விருந்துக்கு வருமாறு எஸ்தர் அழைக்கிறாள். ஆனாலும் எஸ்தரிடத்தில் வேறு விண்ணப்பம் உள்ளது என்பது ராஜாவுக்குத் தெரிய வருகிறது. ராஜா அந்த வேண்டுதலையும் நிறைவேற்றுவதாக வாக்குப்பண்ணுகிறான். (எஸ் 5:3,6).

"நாளைக்கு ராஜாவின் சொற்படி செய்வேன்" - தன்னுடைய எண்ணம் ராஜாவுக்குத் தெரிந்திருப்பதை எஸ்தர் புரிந்து கொள்கிறாள். ஆகையினால் அவள் எதையும் மறைக்காமல் தன்னுடைய விண்ணப்பத்தை மறுநாள் விருந்து வேளையில் அறிவிப்பதாகக் கூறுகிறாள்.

9. ஆமானின் சந்தோஷமும் பெருமையும்

எஸ்தர் 5:9 அன்றையதினம் ஆமான் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்ப் புறப்பட்டான்; ஆனாலும் ராஜாவின் அரமனை வாசலிலிருக்கிற மொர்தெகாய் தனக்கு முன் எழுந்திராமலும் அசையாமலும் இருக்கிறதை ஆமான் கண்டபோது, அவன் மொர்தெகாயின் மேல் உக்கிரம் நிறைந்தவனானான்.

எஸ்தர் 5:10 ஆகிலும் ஆமான் அதை அடக்கிக்கொண்டு, தன் வீட்டுக்கு வந்து, தன் சிநேகிதரையும் தன் மனைவியாகிய சிரேஷையும் அழைத்து,

எஸ்தர் 5:11 தன் ஐசுவரியத்தின் மகிமையையும், தன் பிள்ளைகளின் திரட்சியையும், ராஜா தன்னைப் பெரியவனாக்கி, தன்னைப் பிரபுக்கள் மேலும் ராஜாவின் ஊழியக்காரர் மேலும் உயர்த்தின எல்லாவற்றையும் ஆமான் அவர்களுக்கு விவரித்துச்சொன்னான்.

எஸ்தர் 5:12 பின்னையும் ஆமான்: ராஜஸ்திரீயாகிய எஸ்தரும் தான் செய்த விருந்துக்கு ராஜாவுடனேகூட என்னைத் தவிர வேறொருவரையும் அழைக்க வில்லை; நாளைக்கும் ராஜாவுடனேகூட நான் விருந்துக்கு வரவழைக்கப் பட்டிருக்கிறேன்.

"மொர்தெகாய் தனக்கு முன் எழுந்திராமலும் அசையாமலும் இருக்கிறதை ஆமான் கண்டபோது" - ராஜாவோடு எஸ்தர் தன்னையும் விருந்து அழைத்திருப்பது ஆமானுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனாலும் மொர்தெகாய் அவனுக்கு மரியாதை பண்ணாதது ஆமானுக்கு மிகுந்த கோபமாகவும் இருக்கிறது. ஆமான் தன்னுடைய கோபத்தை உடனடியாக வெளிப்படுத்திக் காண்பிக்க வில்லை. மொர்தெகாயின்மீது தனக்குள்ள கோபத்தையெல்லாம் ஆமான் தன் வீட்டாரிடம் கூறி, வருத்தப்படுகிறான். (எஸ் 5:9-12).

மொர்தெகாயின் விசுவாசமும், சுபாவமும்

பெர்சிய தேசத்தில் யூதருக்கு வந்திருக்கும் பிரச்சனைகளுக்கெல்லாம் ஆமானே மூல காரணம் என்பதை மொர்தெகாய் தெரிந்து வைத்திருக்கிறான். இதற்காக அவன் ஆமானிடம் நயந்துபேசி மன்றாடுவதற்குப் பதிலாக மொர்தெகாய் ஏதோ ஒரு காரணத்திற்காக மிகவும் இறுமாப்போடு இருக்கிறான். தன்னுடைய ஜீவனே போனாலும், கொள்கையை விட்டுக்கொடுக்க மொர்தெகாய் விரும்பவில்லை. அவன் கர்த்தரை நம்புகிறான். கர்த்தர் மூலமாக ஏதாவது ஒரு வழியில் யூத ஜனத்திற்கு இரட்சிப்பு உண்டாகும் என்றும் விசுவாசிக்கிறான். (எஸ் 4:14). இந்தச் சூழ்நிலையில் எஸ்தர் தான் சொன்னபடி செய்யாதுபோனாலும், யூதருக்கு யார் மூலமாவது இரட்சிப்பு உண்டாகும் என்று மொர்தெகாய் உறுதியாக நம்புகிறான்.

5 அதிகாரம்

நியாயப்பிரமாணம், சங்கீதங்கள், தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களில் பல ஆகியவை ஏற்கெனவே எழுதப்பட்டுள்ளன. மொர்தெகாய் இவற்றையெல்லாம் வாசித்துப் பார்த்திருப்பான். யூத ஜனங்களை யாராலும் அழிக்க முடியாது என்றும், அவர்கள் கர்த்தரால் ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகத் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் என்பதையும் மொர்தெகாய் வேதவாக்கியத்தின் மூலமாக நன்றாக அறிந்திருக்கிறான். ஆபிரகாம் (ஆதி 12:12; ஆதி 20:2,11), ஈசாக்கு (ஆதி 26:7), யாக்கோபு (ஆதி 31:13; ஆதி 32:6-32) ஆகியோர்கூட கர்த்தரை விசுவாசிக்காமல், பல சமயங்களில் தங்களுடைய ஜீவனுக்குப் பயந்து ஜீவித்திருக்கிறார்கள். தங்களுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேறாமல் போய்விடுமோ என்று இவர்களெல்லாம் சில சமயங்களில் கர்த்தரைச் சந்தேகப் பட்டிருக்கிறார்கள். ஆனால் மொர்தெகாயிடமோ கர்த்தரைக் குறித்தும், அவருடைய வாக்குத்தத்தத்தைக் குறிக்கும் எள்ளளவும் சந்தேகம் உண்டாகவில்லை.

இந்தப் பிரச்சனைக்காக மொர்தெகாய் ஏற்கெனவே உபவாசித்து, ஜெபித்து, இதினுடைய சகல காரியங்களையும் கர்த்தருடைய கையில் ஒப்புக் கொடுத்து விட்டான். இதன் நிமித்தமாகக் கர்த்தருடைய ஜனத்திற்குச் சத்துருவாக இருக்கும் ஆமானுக்கு மொர்தெகாய் மரியாதை பண்ண மறுத்துவிடுகிறான்.

"தன் மனைவியாகிய சிரேஷையும் அழைத்து" - இது ஆமானுடைய இழிவான குணத்தைக் காண்பிக்கிறது. ஆமான் சுயபெருமையை விரும்புகிறான். தன்னுடைய வாழ்வில் ஏற்படும் சிறிய வெற்றியானாலும், சிறிய தோல்வியானாலும் அதைத் தன்னுடைய குடும்பத்தாரிடமும், நண்பர்களிடமும் விரிவாக எடுத்துப் பேசுகிறான். (எஸ் 5:10-13).

ஆமானின் சுயபெருமை

1. தன் ஐசுவரியத்தின் மகிமை (எஸ் 3:9-11)
2. தன் பிள்ளைகளின் திரட்சி
3. ராஜா தன்னைப் பெரியவனாக்கியது. (எஸ் 3:1)
4. ராஜஸ்திரீயாகிய எஸ்தர் தன்னை ராஜாவோடு விருந்துக்கு அழைத்தது. (எஸ் 5:12).

"ராஜாவுடனேகூட என்னைத்தவிர வேறொருவரையும் அழைக்கவில்லை" - எஸ்தரின் மனதில் என்ன இருக்கிறது என்பது ஆமானுக்குத் தெரியாது. விருந்துக்குத் தான் அழைக்கப்பட்டிருப்பது தனக்குப் பெருமையான காரியம் என்று ஆமான் நினைக்கிறான். தன்னுடைய மரணசாசனமே அங்கு எழுதப்படப் போகிறது என்பதை அறியாமல் தன் குடும்பத்தாரோடு சந்தோஷமாக இருக்கிறான்.

10. மொர்தெகாயை அழிப்பதற்கு ஆமானின் புதிய சதித்திட்டம்

எஸ்தர் 5:13 ஆனாலும் அந்த யூதனாகிய மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறதை நான் காணுமளவும் அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லையென்றான்.

எஸ்தர் 5:14 அப்பொழுது அவன் மனைவியாகிய சிரேஷும் அவனுடைய சிநேகிதர் எல்லாரும் அவனைப் பார்த்து: ஐம்பதுமுழ உயரமான ஒரு தூக்குமரம் செய்யப்படவேண்டும்; அதிலே மொர்தெகாயை தூக்கிப்போடும்படி நாளையதினம் நீர் ராஜாவுக்குச் சொல்லவேண்டும்; பின்பு சந்தோஷமாய் ராஜாவுடனேகூட விருந்துக்குப் போகலாம் என்றார்கள்; இந்தக் காரியம் ஆமானுக்கு நன்றாய்க் கண்டதினால் தூக்குமரத்தைச் செய்வித்தான்.

எஸ்தர் – தொகுப்புரை

5 அதிகாரம்

"மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலில் உட்கார்ந்திருக்கிறதை நான் காணுமளவும்" - ஆமானின் வாழ்வில் பல மேன்மைகள் உண்டாயிற்று. ஆனாலும் அவற்றில் அவன் திருப்திப்படவில்லை. மொர்தெகாய் அவனுக்கு மரியாதை பண்ணாதது ஆமானுக்கு மிகவும் அவமாரியாதையாக இருக்கிறது. "அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லை" என்னும் வாக்கியத்தில் யெகோவா என்னும் பெயரிலுள்ள எழுத்துக்கள் மறைந்துள்ளன.

"ஐம்பதுமுழ உயரமான ஒரு தூக்குமரம் செய்யப்படவேண்டும்" - மொர்தெகாயைத் தூக்கிப்போடும்படி ஆமானின் குடும்பத்தார் ஆலோசனை கூறுகிறார்கள். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சிலுவை மரத்தைப் போல பெர்சிய தேசத்தில் தூக்கு மரத்தில் ஒரு குற்றவாளியைச் சாகும் வரையிலும் தொங்கவிடுவது வழக்கம். (அப் 5:30; அப் 10:39; அப் 13:29; 1பேதுரு 2:24). தன் குடும்பத்தாரின் ஆலோசனை ஆமானுக்கு நன்றாய்ப்படுகிறது. ராஜாவிடம் இதைப் பற்றிப் பேசுவதற்கு முன்பாகவே ஆமான் தூக்குமரத்தைச் செய்தான். ஆனால் கர்த்தருடைய திட்டமோ ஆமானுக்கு விரோதமாக இருக்கிறது. கர்த்தர் மொர்தெகாயை இரட்சிக்கிறார். ஆமான் தான் செய்த தூக்குமரத்திலேயே தூக்கிப்போடப் படுகிறான். (எஸ் 6:1-14).

6 அதிகாரம்

11. மொர்தெகாய்க்குத் தெய்வீக உதவி

எஸ்தர் 6:1 அந்த ராத்திரியிலே ராஜாவுக்கு நித்திரை வராதபடியினால், காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தைக் கொண்டுவரச் சொன்னான்; அது ராஜசமுகத்தில் வாசிக்கப்பட்டது.

எஸ்தர் 6:2 அப்பொழுது வாசற்காவலாளரில் ராஜாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானாவும் தேரேசும், ராஜாவாகிய அகாஸ்வேருவின் மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிறது வாசிக்கப்பட்டது.

எஸ்தர் 6:3 அப்பொழுது ராஜா: இதற்காக மொர்தெகாய்க்கு கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று கேட்டான். அதற்கு ராஜாவைச் சேவிக்கிற ஊழியக்காரர்: அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொன்னார்கள்.

"அந்த ராத்திரியிலே ராஜாவுக்கு நித்திரை வராதபடியினால்" - கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை அவர்களுடைய இக்கட்டுக் காலத்திலிருந்து மீட்பதற்குச் சித்தம் கொண்டிருக்கிறார். மொர்தெகாயைத் தான் செய்த தூக்குமரத்தில் தூக்கிப்போட வேண்டுமென்று ஆமான் ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணுவதற்கு முன்பாகவே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு தாம் பண்ணிய உடன்படிக்கையை நினைத்துப் பார்க்கிறார். தம்முடைய ஜனத்தை இரட்சிப்பதற்குத் தாம் நிறைவேற்ற வேண்டிய திட்டத்தை அந்த ராத்திரியிலேயே ஆரம்பிக்கிறார். அதனால் அகாஸ்வேரு ராஜாவிற்கு அந்த ராத்திரியிலே நித்திரை வராமல் போயிற்று. நித்திரை வராத வேளையில் ராஜா காலவர்த்தமானங்கள் எழுதியிருக்கிற நடபடி புஸ்தகத்தைத் தனக்கு வாசிக்குமாறு கூறுகிறான். அதில் ராஜாவாகிய அகாஸ்வேருவின்மேல் கைபோடப்பார்த்த செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று எழுதியிருக்கிற பகுதி ராஜாவிற்கு அந்த இரவு வேளையில் வாசித்துக் காண்பிக்கப்படுகிறது. கர்த்தர் ராஜாவின் உள்ளத்தில் பேசுகிறார். தன்னுடைய உயிரைப் பாதுகாத்த மொர்தெகாய்க்கு கனமும் மேன்மையும் செய்யப்பட்டதா என்று ராஜா கேட்டான். அவனுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்பதை அறிந்து கொண்ட ராஜா, மொர்தெகாய்க்குக் கனமும், மேன்மையும் செய்ய தீர்மானம் பண்ணினான். அதன் பின்பு, ராஜாவுக்கு நித்திரை வருகிறது. (எஸ் 6:1-3).

12. யூதனாகிய மொர்தெகாயை வாழ்த்துமாறு ஆமானின் கட்டாயம்

எஸ்தர் 6:4 ஆமான் தான் செய்த தூக்குமரத்திலே மொர்தெகாயைத் தூக்கிப்போட வேண்டுமென்று, ராஜாவிடத்தில் பேசும்படி ராஜ அரமனையின் வெளிமுற்றத்திலே வந்திருந்தான். அப்பொழுது ராஜா: முற்றத்திலிருக்கிறது யார் என்று கேட்டான்.

எஸ்தர் 6:5 ராஜாவின் ஊழியக்காரர் அவனை நோக்கி: இதோ, ஆமான் முற்றத்திலே நிற்கிறான் என்றார்கள்; ராஜா: அவன் உள்ளே வரட்டும் என்றான்.

எஸ்தர் 6:6 ஆமான் உள்ளே வந்தபோது, ராஜா அவனை நோக்கி: ராஜா கனம்பண்ணவிரும்புகிற மனுஷனுக்கு என்னசெய்யப்பட வேண்டும் என்று கேட்டான்; அதற்கு ஆமான், என்னையன்றி, யாரை ராஜா கனம்பண்ண விரும்புவார் என்று தன் மனதிலே நினைத்து,

எஸ்தர் 6:7 ராஜாவை நோக்கி: ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்,

எஸ்தர் 6:8 ராஜா உடுத்திக்கொள்ளுகிற ராஜவஸ்திரமும், ராஜா ஏறுகிற குதிரையும், அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும்.

எஸ்தர் – தொகுப்புரை

6 அதிகாரம்

எஸ்தர் 6:9 அந்த வஸ்திரமும் குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப் படவேண்டும்; ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரித்தபின், அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்படவேண்டும் என்றான்.

எஸ்தர் 6:10 அப்பொழுது ராஜா ஆமானை நோக்கி: சீக்கிரமாய் நீ சொன்னபடி வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய், ராஜ அரமனையின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தப்பிரகாரம் செய்; நீ சொன்ன எல்லாவற்றிலும் ஒன்றும் தவறாதபடி பார் என்றான்.

எஸ்தர் 6:11 அப்படியே ஆமான் வஸ்திரத்தையும் குதிரையையும் கொண்டு போய், மொர்தெகாயை அலங்கரித்து, அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்து, ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறினான்.

"ஆமான் .... ராஜ அரமனையின் வெளிமுற்றத்திலே வந்திருந்தான்" - அதிகாலை வேளையில் ஆமான் மொர்தெகாயைத் தான் செய்த தூக்குமரத்தில் தூக்கிப் போடுவதற்கு ராஜாவின் அனுமதியைப் பெறுவதற்காக அங்கு வந்திருக்கிறான். அதற்குள் கர்த்தர் இரவு வேளையில் ராஜாவிற்கு நித்திரை வரவிடாமல் செய்து விடுகிறார். மொர்தெகாயைக் கனப்படுத்த வேண்டும் என்னும் சிந்தனையை ராஜாவின் உள்ளத்தில் பதிய வைத்திருக்கிறார்.

"ராஜா கனம்பண்ணவிரும்புகிற மனுஷனுக்கு என்னசெய்யப்படவேண்டும்" - ஆமான் பேசுவதற்கு முன்பாகவே, ராஜா பேசுகிறான். ராஜா தன்னைத்தான் கனம்பண்ண விரும்புகிறார் என்று ஆமான் தன் சுய பெருமையில் நினைக்கிறான். தன்னை மனதில் நினைத்துக் கொண்டு, எப்படியெல்லாம் கனப்படுத்த வேண்டுமென்று ராஜாவுக்கு ஆலோசனை கூறுகிறான். (எஸ் 6:6-11).

ஆமானின் ஆலோசனை

1. ராஜா உடுத்திக்கொள்ளுகிற ராஜவஸ்திரம் கொண்டுவரப்படவேண்டும். (எஸ் 6:8).
2. ராஜா ஏறுகிற குதிரை கொண்டுவரப்பட வேண்டும்.
3. அவர் சிரசிலே தரிக்கப்படும் ராஜமுடியும் கொண்டுவரப்படவேண்டும்.
4. அந்த வஸ்திரமும் குதிரையும் ராஜாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படவேண்டும் (எஸ் 6:9).
5. ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனை அலங்கரிக்க வேண்டும்.
6. அவனைக் குதிரையின்மேல் ஏற்றி, நகரவீதியில் உலாவும்படி செய்ய வேண்டும்.
7. ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு இப்படியே செய்யப்படும் என்று அவனுக்கு முன்பாகக் கூறப்பட வேண்டும்.

"யூதனாகிய மொர்தெகாய்க்கு அந்தப் பிரகாரம் செய்" - மொர்தெகாயைத் தூக்கிப் போட வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்த ஆமானுக்கு ராஜாவின் வாயிலிருந்து அதிர்ச்சியான செய்தி வருகிறது. யாரை அழித்துப் போடவேண்டுமென்று ஆமான் நினைத்தானோ அவனை ராஜாவின் கட்டளைப்படி இப்போது கனப்படுத்தப் போகிறான். யூதர்கள் கொல்லப்பட வேண்டுமென்று ஏற்கெனவே ராஜாவின் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

6 அதிகாரம்

இப்போது ஆமான் ஒரு யூதனைக் கனப்படுத்தப் போகிறான். இதைப் பார்க்கும் மற்ற யூதர்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்திருக்கும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை இரட்சிக்க கிரியை செய்ய ஆரம்பித்து விட்டார் என்று தங்களுடைய உள்ளத்தில் நினைத்து, மகிழ்ச்சியடைவார்கள். மெய்யாகவே கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்காகக் கிரியை செய்ய ആரம்பித்திருக்கிறார்.

13. ஆமானின் வீழ்ச்சி முற்குறிக்கப் படுகிறது

எஸ்தர் 6:12 பின்பு மொர்தெகாய் ராஜாவின் அரமனைவாசலுக்குத் திரும்பி வந்தான்; ஆமானோவென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப்போனான்.

எஸ்தர் 6:13 ஆமான் தனக்கு நேரிட்ட எல்லாவற்றையும் தன் மனைவியாகிய சிரேஷுக்கும் தன் சிநேகிதர் எல்லாருக்கும் அறிவித்தபோது, அவனுடைய ஆலோசனைக்காரரும் அவன் மனைவியாகிய சிரேஷும் அவனைப் பார்த்து: மொர்தெகாய்க்கு முன்பாக நீர் தாழ்ந்துபோகத் தொடங்கினீர்; அவன் யூதகுலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவது நிச்சயம் என்றார்கள்.

எஸ்தர் 6:14 அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, ராஜாவின் பிரதானிகள் வந்து, எஸ்தர் செய்த விருந்துக்குவர ஆமானைத் துரிதப்படுத்தினார்கள்.

"மொர்தெகாய் ராஜாவின் அரமனை வாசலுக்குத் திரும்பிவந்தான்" - இந்த வாக்கியத்தில் மொர்தெகாயின் சுபாவமும், ஆமானின் சுபாவமும் வெளிப்படுகிறது. மொர்தெகாய் ராஜாவின் உத்தரவுப் பிரகாரம் கனப்படுத்தப்பட்டாலும், தன்னுடைய பழைய தாழ்மையான உத்தியோகஸ்தலத்திற்குத் திரும்பி வருகிறான். அரமனை வாசலுக்கு வந்து எந்தவிதமான ஆடம்பரமும், பெருமையும் இல்லாமல் தன்னுடைய பழைய வேலையை மனத்தாழ்மையோடு செய்வதற்கு வருகிறான். ஆனால் ஆமானோவென்றால் சஞ்சலப்பட்டு முக்காடிட்டுக்கொண்டு தன் வீட்டுக்குத் தீவிரித்துப்போகிறான்.

"ஆமான் தனக்கு நேரிட்ட எல்லாவற்றையும்" - ஒரு நாளுக்கு முன்பு, ஆமான் தன்னுடைய சுயபெருமையையெல்லாம் தன் குடும்பத்தாரிடம் பகிர்ந்து கொண்டான். ஆனால் இப்போதோ தனக்கு நேரிட்ட அவமானத்தையெல்லாம் தன் குடும்பத்தாரிடம் கூறுகிறான். (எஸ் 5:10- 14).

தீர்க்கதரிசன எண் - 1

"மொர்தெகாய்க்கு முன்பாக நீர் தாழ்ந்துபோகத் தொடங்கினீர் அவன் யூதகுலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாகத் தாழ்ந்துபோவது நிச்சயம்" (எஸ் 6:13) இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ஆமானுடைய ஆலோசனைக் காரருக்கும், அவனுடைய மனைவியாகிய சிரேஷுக்கும், ஆவியானவரே இந்த முன்னறிவிப்பைக் கொடுத்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவைப் பற்றி துன்மார்க்கமான பிரதான ஆசாரியன் முன்னறிவித்ததுபோல, இந்தச் சம்பவம் அமைந்திருக்கிறது. (யோவான் 11:49-51). மொர்தெகாய் யூதனானால், ஆமானால் அவனை மேற் கொள்ள முடியாது என்று முன்னறிவிக்கிறார்கள். இவர்கள்பேசிக் கொண்டிருக்கும்போதே ஆமானுடைய ஜீவன் போவதற்கு அங்கு ராஜாவின் பிரதானிகள் மூலமாக அழைப்பு வருகிறது. (எஸ் 6:14).

7 அதிகாரம்

14. இராஜாவுக்கும் ஆமானுக்கும் எஸ்தரின் விருந்து

எஸ்தர் 7:1 ராஜாத்தியாகிய எஸ்தருடனே விருந்துண்ண, ராஜாவும் ஆமானும் வந்தபோது,

எஸ்தர் 7:2 இரண்டாம் நாள் விருந்தில் திராட்சரசம் பரிமாறப்படும்போது, ராஜா எஸ்தரை நோக்கி: எஸ்தர் ராஜாத்தியே, உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கொடுக்கப்படும்; நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் பாதிமட்டும் கேட்டாலும் கிடைக்கும் என்றான்.

15. தனது ஜீவனுக்காகவும் யூதருடைய ஜீவனுக்காகவும் எஸ்தரின் விண்ணப்பம்

எஸ்தர் 7:3 அப்பொழுது ராஜாத்தியாகிய எஸ்தர் பிரதியுத்தரமாக: ராஜாவே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்து, ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால் என் வேண்டுதலுக்கு என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப் படுவதாக.

எஸ்தர் 7:4 எங்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்; அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்பட்டுப் போனாலும் நான் மவுனமாயிருப்பேன்; இப்பொழுதோ ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம்பண்ண முடியாது என்றாள்.

"என் வேண்டுதலுக்கு என் ஜீவனும் என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக" - எஸ்தர் ராஜாத்தியின் வேண்டுகோளை நிறைவேற்றுவதாக அகாஸ்வேரு ராஜா மூன்றுமுறை உறுதி பண்ணியிருக்கிறான். (எஸ் 5:3,6; எஸ் 7:2) இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி எஸ்தர் தன்னுடைய ஜீவனையும், தன் ஜனங்களுடைய ஜீவனங்களையும் பாதுகாக்குமாறு ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணுகிறாள். (எஸ் 7:3- 4).

"நானும் என் ஜனங்களும் விற்கப்பட்டோம்" - தானும், தனது ஜனங்களும் அடிமைகளாகவும் வெள்ளாட்டிகளாகவும் விற்கப்படாமல், அழித்துக் கொன்று நிர்மூலமாக்கும்படி தாங்கள் விற்கப்பட்டதாக எஸ்தர் ராஜாவிடம் அறிவிக்கிறாள். ராஜாவுக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ண முடியாது என்றும் ஆமானைப் பற்றியும் கூறுகிறாள். (எஸ் 7:3-4).

16. இராஜாவின் விசாரிப்பும் ஆமானின் மீது எஸ்தரின் குற்றச்சாட்டும்

எஸ்தர் 7:5 அப்பொழுது ராஜாவாகிய அகாஸ்வேரு மறுமொழியாக, ராஜாத்தியாகிய எஸ்தரை நோக்கி: இப்படிச் செய்யத் துணிகரங்கொண்டவன் யார்? அவன் எங்கே? என்றான்.

எஸ்தர் 7:6 அதற்கு எஸ்தர்: சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன் இந்தத் துஷ்ட ஆமான்தான் என்றாள்; அப்பொழுது ராஜாவுக்கும் ராஜாத்திக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான்.

"யார்? அவன் எங்கே?" - இந்த வாக்கியத்திலும் யெகோவா என்னும் வார்த்தையிலுள்ள எழுத்துக்கள் மறைந்துள்ளன. இதிலுள்ள எபிரெய வார்த்தை 'EHYEH אֶהְיֶה - haw-yaw' - 1961 என்பதாகும். இது "நான் நானாக இருக்கிறேன்" "I Am that I Am" (யாத் 2:23-25=யாத் 3:14-15) என்னும் வாக்கியத்தின் சுருக்கமாகும்.

7 அதிகாரம்

"இப்படிச் செய்யத் துணிகரங்கொண்டவன் யார்" - எஸ்தரின் பதில் அகாஸ்வேரு ராஜாவிற்கு அதிர்ச்சியாக இருக்கிறது. பெர்சிய ராஜ்யத்தில் ராஜஸ்திரீயையும், அவளுடைய ஜனங்களையும் கொல்லும் அளவிற்குத் துணிகரம் கொண்டவன் யாரென்பதை ராஜா உடனடியாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறான். இதுவரையிலும் ராஜாவிற்கும், ஆமானிற்கும் எஸ்தர் ஒரு யூத ஸ்திரீ என்பது தெரியவில்லை. எஸ்தரின் ஜனங்களைக்கொன்று போடுவதற்காகவே ஆமான் தன்னிடத்தில் ஆணை பெற்றான் என்பதும் ராஜாவுக்குத் தெரியாது. ராஜாவும் தான் இட்ட ஆணையைப் பற்றி அதிகமாக விசாரிக்கவில்லை. ராஜா ஆமானை நம்பினான். அவனுடைய பொய்களையும், குற்றச் சாட்டுக்களையும் நம்பினான். (எஸ் 3:8). ஆமான் சாத்தானின் கருவியாக இருந்தான். ஆமானின் சுயபெருமையே அவனுடைய அழிவுக்குக் காரணமாயிற்று. ஆமான் முன்னுக்குப்பின் முரணான காரியங்களைச் செய்து, முடிவில் அழிந்துபோனான்.

"சத்துருவும் பகைஞனுமாகிய அந்த மனிதன் இந்தத் துஷ்ட ஆமான்தான்" - ஆமான் மீது குற்றம் சுமத்துவதற்கு எஸ்தர் பயப்படவில்லை. எஸ்தரின் குற்றச்சாட்டு ஆமானுக்கு பேரதிர்ச்சியாயிற்று. விருந்துக்குத் தான் அழைக்கப்படுவது தனக்குக் கிடைத்த பெருமை என்று இதுவரையிலும் நினைத்தான். ஆனால் இப்போதோ தன்மீது குற்றம்சாட்டப்படியினால், ராஜாவுக்கும் ராஜாத்திக்கும் முன்பாக ஆமான் திகிலடைந்தான்.

17. இராஜாவின் கோபமும் ஆமான் இரக்கத்திற்காகக் கெஞ்சுவதும்

எஸ்தர் 7:7 ராஜா உக்கிரத்தோடே திராட்சரசப்பந்தியை விட்டெழுந்து, அரமனைத் தோட்டத்திற்குப் போனான்; ராஜாவினால் தனக்குப் பொல்லாப்பு நிர்ணயிக்கப்பட்டதென்று ஆமான் கண்டு, ராஜாத்தியாகிய எஸ்தரிடத்தில் தன் பிராணனுக்காக விண்ணப்பம்பண்ண எழுந்துநின்றான்.

"ராஜா உக்கிரத்தோடே திராட்சரசப்பந்தியை விட்டெழுந்து" - ராஜா இவ்வாறு எழுந்து போவதே அவனுடைய கோபத்தை வெளிப் படுத்துகிறது. தனது நம்பிக்கைக்குரிய ஆமான் தன்னை மோசம் செய்துவிட்டதாக கோபப்பட்டு ராஜா அரமனைத் தோட்டத்திற்குப் போனான். எல்லாப் பிரபுக்களுக்கும் மேலாக ராஜா ஆமானை உயர்த்தினான். (எஸ் 3:1). ஆனால் இப்போதோ ஆமானுடைய சுயரூபம் தெரிந்து அவனுக்குத் தண்டனை கொடுக்க ராஜா தீர்மானம் பண்ணிவிடுகிறான்.

"ராஜாவினால் தனக்குப் பொல்லாப்பு நிர்ணயிக்கப்பட்டதென்று" - எபிரெய மொழியிலுள்ள இந்த வாக்கியத்திலும் யெகோவா என்னும் பெயரிலுள்ள எழுத்துக்கள் மறைந்துள்ளன.

18. மொர்தெகாய்க்கு ஆயத்தம் பண்ணின தூக்குமரத்தில் ஆமானைத் தூக்கிப் போட்டார்கள்

எஸ்தர் 7:8 ராஜா அரமனைத் தோட்டத்திலிருந்து திராட்சரசம் பரிமாறப் பட்ட இடத்துக்குத் திரும்பிவருகையில், எஸ்தர் உட்கார்ந்திருக்கிற மெத்தையின் மேல் ஆமான் விழுந்துகிடந்தான்; அப்பொழுது ராஜா: நான் அரமனையிருக்கும்போதே என் கண்முன்னே இவன் ராஜாத்தியைப் பலவந்தம் செய்யவேண்டுமென்றிருக்கிறானே என்றான்; இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து பிறந்தவுடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள்.

எஸ்தர் 7:9 அப்பொழுது ராஜசமுகத்தில் இருக்கிற பிரதானிகளில் அற்போனா என்னும் ஒருவன்: இதோ, ராஜாவின் நன்மைக்காகப் பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம் ஆமானின் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறது என்றான்; அப்பொழுது ராஜா: அதிலே அவனைத் தூக்கிப்போடுங்கள் என்றான்.

7 அதிகாரம்

எஸ்தர் 7:10 அப்படியே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்தில் ஆமானையே தூக்கிப் போட்டார்கள்; அப்பொழுது ராஜாவின் உக்கிரம் தணிந்தது.

"இந்த வார்த்தை ராஜாவின் வாயிலிருந்து பிறந்தவுடேனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள்" - ஒருவனுடைய முகத்தை மூடிப்போடுவது என்பது இனிமேல் அவன் ராஜாவின் முகத்தைப் பார்க்க தகுதியற்றவன் என்பதற்கு அடையாளம். மேலும் முகம் மூடப்பட்ட மனுஷனுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது என்பதற்கும் இது அடையாளமாகும்.

ராஜாவின் பிரதானிகளில் ஒருவன் ஆமான் செய்து வைத்த 75 அடி தூக்கு மரத்தைப் பற்றி ராஜாவிடம் அறிவிக்கிறான். ஆமான் செய்த அந்தத் தூக்குமரத்திலேயே ஆமானைத் தூக்கிப் போடுமாறு அகாஸ்வேரு ராஜா கட்டளையிடுகிறான். (எஸ் 7:9-10).

"மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரம்" - ஐம்பது முழ உயரம் என்பது 75 அடி உயரமாகும். தூக்கு மரம் அதிக உயரமாக இருப்பது மொர்தெகாயின் மீது ஆமானுக்கு இருந்த கோபத்தின் அளவைக் காண்பிக்கிறது. மொர்தெகாயின் முடிவைத் தேசத்திலுள்ள எல்லோரும் பார்க்க வேண்டுமென்று ஆமான் விரும்பினான்.

8 அதிகாரம்

V. ஆமானின் சதித்திட்டம் திரும்புகிறது - (8:1-9:19)

1. ஆமானின்மீது பழி தீர்க்கப்படுவது

எஸ்தர் 8:1 அன்றையதினம் அகாஸ்வேரு ராஜா யூதரின் சத்துருவாயிருந்த ஆமானின் வீட்டை ராஜாத்தியாகிய எஸ்தருக்குக் கொடுத்தான்; மொர்தெகாய் ராஜசமுகத்தில் வந்தான்; அவன் தனக்கு இன்னஉறவு என்று எஸ்தர் அறிவித்திருந்தாள்.

எஸ்தர் 8:2 ராஜா ஆமானின் கையிலிருந்து வாங்கிப்போட்ட தம்முடைய மோதிரத்தை எடுத்து, அதை மொர்தெகாய்க்குக் கொடுத்தான்; எஸ்தர் மொர்தெகாயை ஆமானின் அரமனைக்கு அதிகாரியாக வைத்தாள்.

"அன்றையதினம்" - எஸ் 6:1 ஆவது வசனத்தில் "அந்த ராத்திரியிலே" என்றுள்ளது. கர்த்தர் ராத்திரியில் ராஜாவின் உள்ளத்தில் கிரியை செய்ய ஆரம்பித்தார். இப்போது கர்த்தருடைய கிரியை ஆமானுக்கு விரோதமாக எழும்பிற்று.

"ஆமானின் வீட்டை ராஜாத்தியாகிய எஸ்தருக்குக் கொடுத்தான்" - எஸ்தர் அந்த வீட்டுக்கு மொர்தெகாயை அதிகாரியாக வைத்தாள். (எஸ் 8:1-2). ஆமானின் மறைவிற்காக யூதர்கள் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். கர்த்தர் ஏற்கெனவே முன்னறிவித்திருந்த அமலேக்கியரில் ஒருவன் இப்போது அழிந்தான். (யாத் 17:16; எண் 25:7; 1சாமு 15:8,32).

"அவன் தனக்கு இன்னஉறவு என்று எஸ்தர் அறிவித்திருந்தாள்" - தனக்கும், மொர்தெகாய்க்கும் உள்ள உறவை எஸ்தர் ராஜாவிடம் அறிவிக்கிறாள். ராஜா ஆமானின் கையிலிருந்து வாங்கிப்போட்ட தம்முடைய மோதிரத்தை எடுத்து, அதை மொர்தெகாய்க்குக் கொடுத்தான். அமலேக்கியனாகிய ஆமானின் இடத்தில் ராஜா யூதனாகிய மொர்தெகாயை வைத்து, அவனை உயர்த்தினான். (எஸ் 8:2,7-17). கர்த்தர் தம்முடைய ஜனங்களைப் புறஜாதி தேசத்திலும் உயர்த்துகிறார். எகிப்து தேசத்தில் கர்த்தர் யோசேப்பைப் பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்தில் உயர்த்தினார். (ஆதி 41-50). எகிப்தின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகை செய்வதற்கு மோசே அதிகாரம் பெற்றவனாக இருந்தான். (யாத் 2:7-10; அப் 7:20-22; எபி 11:24). தானியேலும், அவனுடைய மூன்று நண்பர்களும் பாபிலோனிலும், பெர்சியாவிலும் உயர்த்தப்பட்டார்கள். (தானி 2:46-49; தானி 3:30; தானி 6:1-3). இப்போது மொர்தெகாய் இங்கு உயர்த்தப்பட்டிருக்கிறான். (எஸ் 8:3-17).

2. தன் ஜீவனுக்காகவும் தன் ஜனங்களின் ஜீவனுக்காகவும் எஸ்தரின் மன்றாட்டு

எஸ்தர் 8:3 பின்னும் எஸ்தர் ராஜசமுகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து அழுது, ஆகாகியனான ஆமானின் தீவினையையும் அவன் யூதருக்கு விரோதஞ்செய்ய யோசித்த யோசனையையும் பரிகரிக்க அவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினாள்.

எஸ்தர் 8:4 அப்பொழுது ராஜா பொற்செங்கோலை எஸ்தருக்கு நீட்டினான்; எஸ்தர் எழுந்திருந்து ராஜசமுகத்தில் நின்று:

எஸ்தர் 8:5 ராஜாவுக்குச் சித்தமாயிருந்து அவர் சமுகத்தில் எனக்குக் கிருபைகிடைத்து, ராஜசமுகத்தில் நான் சொல்லும் வார்த்தை சரியென்று காணப்பட்டு, அவருடைய கண்களுக்கு நான் பிரியமாயிருந்தால், ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரை அழிக்கவேண்டும் என்று அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் தீவினையாய் எழுதின கட்டளைகள் செல்லாமற்போகப்பண்ணும்படி எழுதி அனுப்பப்படவேண்டும்.

8 அதிகாரம்

எஸ்தர் 8:6 என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும்? என்றாள்.

“எஸ்தர் ராஜசமுகத்தில் பேசி, அவன் பாதங்களில் விழுந்து அழுது” - எஸ்தர் தன்னையும், தன்னை வளர்த்த மொர்தெகாயையும் காப்பாற்றியிருக்கிறாள். ஆனாலும் அவள் தன் யூதஜனத்தை மறந்து விடவில்லை. ராஜாவின் பாதங்களில் விழுந்து அழுது தனது ஜனத்தாருக்காக மன்றாடுகிறாள்.

“ராஜா பொற்செங்கோலை எஸ்தருக்கு நீட்டினான்” - எஸ்தர் விண்ணப்பம் பண்ணிய விதம் ராஜாவின் உள்ளத்தைத் தொட்டது. ராஜா தன் செங்கோலை நீட்டுவது தன்னுடைய சமுகத்தில் அவளுடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதற்கு அடையாளமாகும்.

“ராஜாவுக்குச் சித்தமாயிருந்து அவர் சமுகத்தில் எனக்குக் கிருபைகிடைத்து” - எஸ்தர் ஒவ்வொரு முறை ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணும்போதும் மிகுந்த ஜாக்கிரதையுடனும், ஞானத்துடனும், தீர்மானத்துடனும் விண்ணப்பிக்கிறாள். (எஸ் 7:3-4=எஸ் 8:3-6).

3. யூதர்களைக் காப்பாற்றுவதற்கும் அவர்களுடைய விரோதிகளை அழிப்பதற்கும் புதிய கட்டளை

எஸ்தர் 8:7 அப்பொழுது அகாஸ்வேரு ராஜா ராஜாத்தியாகிய எஸ்தரையும் யூதனாகிய மொர்தெகாயையும் நோக்கி: இதோ, ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன்; அவன் யூதர்மேல் தன் கையைப் போட எத்தனித்தபடியினால் அவனை மரத்திலே தூக்கிப்போட்டார்கள்.

எஸ்தர் 8:8 இப்போதும் உங்களுக்கு இஷ்டமானபடி நீங்கள் ராஜாவின் நாமத்தினால் யூதருக்காக எழுதி, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டதைச் சொல்லாமற் போகப்பண்ண ஒருவராலும் கூடாது என்றான்.

எஸ்தர் 8:9 சீவான் மாதம் என்னும் மூன்றாம் மாதம் இருபத்துமூன்றாந் தேதியாகிய அக்காலத்திலேதானே ராஜாவின் சம்பிரதிகள் அழைக்கப் பட்டார்கள்; மொர்தெகாய் கற்பித்த படியெல்லாம் யூதருக்கும் இந்துதேசம்முதல் எத்தியோப்பியா தேசமட்டுமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளின் தேசாபதிகளுக்கும், அதிபதிகளுக்கும், அதிகாரிகளுக்கும், அந்தந்த நாட்டில் வழங்கும் அட்சரத்திலும், அந்தந்த ஜாதியார் பேசும் பாஷையிலும், யூதருக்கு அவர்கள் அட்சரத்திலும் அவர்கள் பாஷையிலும் எழுதப்பட்டது.

எஸ்தர் 8:10 அந்தக் கட்டளைகள் அகாஸ்வேரு ராஜாவின் பேரால் எழுதப்பட்டு, ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடப்பட்டபின், குதிரைகள் மேலும் வேகமான ஒட்டகங்கள்மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறிப்போகிற அஞ்சற்காரர் கையில் அனுப்பப்பட்டது.

எஸ்தர் 8:11 அவைகளில், அகாஸ்வேரு ராஜாவுடைய எல்லா நாடுகளிலும் ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய அந்த ஒரே நாளிலே,

எஸ்தர் 8:12 அந்தந்தப் பட்டணத்திலி ருக்கிற யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்களாகிய ஜனத்தாரும் தேசத்தாருமான எல்லாரையும், அவர்கள் குழந்தைகளையும், ஸ்திரீகளையும் அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும், அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடவும், ராஜா யூதருக்குக் கட்டளையிட்டார் என்று எழுதியிருந்தது.

எஸ்தர் 8:13 யூதர் தங்கள் பகைஞருக்குச் சரிக்குச் சரிக்கட்டும்படி நியமித்த அன்றையதினத்தில் ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று அந்தந்த நாட்டிலுள்ள சகல ஜனங்களுக்கும் கூறப்படுகிறதற்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையின் நகல் இதுவே; இது ஒவ்வொரு நாட்டிலும் பிரசித்தம்பண்ணப் பட்டது.

8 அதிகாரம்

எஸ்தர் 8:14 அப்படியே வேகமான ஒட்டகங்கள் மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறின அஞ்சற்காரர் ராஜாவின் வார்த்தையினால் ஏவப்பட்டு, தீவிரத்தோடே புறப்பட்டுப்போனார்கள்; அந்தக் கட்டளை சூசான் அரமனையில் கொடுக்கப்பட்டது.

"ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன்" - ராஜா ஆமானின் வீட்டை எஸ்தருக்குக் கொடுத்து, அவன்மீது தனக்கிருந்த கோபத்தை வெளிப்படுத்திக் காண்பிக்கிறான். அத்துடன் எஸ்தரும், மொர்தெகாயும் தங்களுக்கு இஷ்டமானபடி ராஜாவின் நாமத்தினால் யூதருக்காக நிருபங்களை எழுதவும், அந்த நிருபத்தில் ராஜாவின் மோதிரத்தினால் முத்திரை போடவும் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. அந்தந்தப் பட்டணத்திலிருக்கிற யூதர் ஒன்றாய்ச் சேர்ந்து, தங்கள் பிராணனைக் காப்பாற்றவும், தங்களை விரோதிக்கும் சத்துருக்களை அழித்துக் கொன்று நிர்மூலமாக்கவும் யூதருக்குக் கட்டளையிடப்படுகிறது. (எஸ் 8:7-14).

"சீவான் மாதம் என்னும் மூன்றாம் மாதம் இருபத்துமூன்றாந்தேதியாகிய அக்காலத்திலே தானே" -யூதரை அழிக்க வேண்டுமென்னும் ஆணை முதலாம் மாதமாகிய நிசான் மாதம் 13 ஆம் தேதி ராஜாவால் உண்டாயிற்று. (எஸ் 3:12). யூதர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும், தங்களுக்கு விரோதமாக எழும்பும் சத்துருக்களை அழிக்கலாம் என்றும், ராஜாவினால் இடப்பட்ட அடுத்த ஆணை மூன்றாம்மாதமாகிய சீவான் மாதம் 23 ஆம் தேதி உண்டாயிற்று. (எஸ் 8:9). பெர்சிய தேசத்திலுள்ள 127 நாடுகளுக்கும் நிருபத்தை அனுப்புகிறார்கள். (எஸ் 8:9) யூதர்கள் எல்லோரும் ஒரு நாளை நியமித்து, அந்த நாளில் அவர்கள் ஒன்றுகூடி தங்களுடைய சத்துருக்களை நிர்மூலமாக்கவும், அவர்களுடைய உடைமைகளைக் கொள்ளையிடவும் தீர்மானம் பண்ணுகிறார்கள். (எஸ் 8:11-14).

"வேகமான ஒட்டகங்கள் மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறின அஞ்சற்காரர்" - ஆமானின் அஞ்சற்காரர் கால்நடையாக நடந்து போனார்கள். (எஸ் 3:12-15) ஆனால் மொர்தெகாயின் அஞ்சற்காரர்களோ வேகமான ஒட்டகங்கள் மேலும், கோவேறு கழுதைகள்மேலும் ஏறிப்போகிறார்கள்.

4. மொர்தெகாயும் யூதர்களும் உயர்த்தப்படுகிறார்கள்

எஸ்தர் 8:15 அப்பொழுது மொர்தெகாய் இளநீலமும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும், பட்டும் இரத்தாம்பரமும் அணிந்தவனாய் ராஜாவினிடத்திலிருந்து புறப்பட்டான்; சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது.

எஸ்தர் 8:16 இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று.

எஸ்தர் 8:17 ராஜாவின் வார்த்தையும் அவனுடைய கட்டளையும் போய்ச்சேர்ந்த எல்லா நாடுகளிலும், எல்லாப் பட்டணங்களிலும், யூதருக்குள்ளே அது மகிழ்ச்சியும், களிப்பும், விருந்துண்டு கொண்டாடும் நல்ல நாளுமாயிருந்தது; யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் யூத மார்க்கத்தில் அமைந்தார்கள்.

"மொர்தெகாய் இளநீலமும் வெள்ளையுமான ராஜவஸ்திரமும், பெரிய பொன்முடியும்" - யூதருக்கு ஆபத்து வந்தபோது, மொர்தெகாய் இரட்டுடுத்தி தன்னைத் தாழ்த்தினான். (எஸ் 4:1) ஆனால் இப்போதோ யூதரை இரட்சிப்பதற்காக ராஜவஸ்திரத்தை அணிகிறான். யூதர்கள் அழிக்கப்படவேண்டுமென்று முதலாவது கட்டளை பிறந்த போது, சூசான் நகரம் கலங்கிற்று. இப்போதோ சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருக்கிறது. (எஸ் 3:15).

9 அதிகாரம்

5. மொர்தெகாயின் பயமும் யூதர்கள் தங்கள் விரோதிகள்மீது விழுவதும்

எஸ்தர் 9:1 ராஜாவின் வார்த்தையின் படியும் அவனுடைய கட்டளையின்படியும் செய்யப்படு கிறதற்கு, ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியிலே, யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பினார்களே; அந்நாளிலே தானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்குக் காரியம் மாறுதலாய் முடிந்தது.

எஸ்தர் 9:2 யூதர் அகாஸ்வேரு ராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள பட்டணங்களிலே தங்களுக்குப் பொல்லாப்பு வரப்பண்ணப் பார்த்தவர்கள்மேல் கைபோடக் கூடிக் கொண்டார்கள்; ஒருவரும் அவர்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதிருந்தது; அவர்களைப் பற்றி சகல ஜனங்களுக்கும் பயமுண்டாயிற்று.

எஸ்தர் 9:3 நாடுகளின் சகல அதிகாரிகளும், தேசாபதிகளும், துரைகளும், ராஜாவின் காரியங்களை நடப்பிக்கிறவர்களும், யூதருக்குத் துணை நின்றார்கள்; மொர்தெகாயினால் உண்டான பயங்கரம் அவர்களைப் பிடித்தது.

எஸ்தர் 9:4 மொர்தெகாய் ராஜாவின் அரமனையில் பெரியவனாயிருந்தான்; அவனுடைய கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று; இந்த மொர்தெகாய் என்பவன் மேன்மேலும் பெரியவனானான்.

எஸ்தர் 9:5 அப்படியே யூதர் தங்கள் சத்துருக்களையெல்லாம் பட்டயத்தால் வெட்டிக்கொன்று நிர்மூலமாக்கி, தங்கள் இஷ்டப்படி தங்கள் பகைஞருக்குச் செய்தார்கள்.

“ஆதார் மாதம் என்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந் தேதியிலே” - இந்தத் தேதியில் யூதரை மேற்கொள்ளலாம் என்று யூதருடைய பகைஞர் நினைத்தார்கள். ஆனால் அந்நாளிலேதானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்குக் காரியம் மாறுதலாய் முடிந்தது. 127 பிரதேசங்களிலுமுள்ள நகரங்களிலும் அங்கங்குள்ள யூதர்கள் ஒன்று கூடினார்கள். தங்களைக் கொல்ல வந்த தங்களுடைய பகைஞரை அவர்கள் சங்காரம் பண்ணினார்கள். ராஜாவின் அதிகாரிகள் யூதருக்கு உதவி செய்தார்கள். யூதருக்கு முன்பாக ஒருவராலும் எதிர்த்து நிற்க முடியவில்லை. யூதரைப் பற்றி சகல ஜனங்களுக்கும் பயமுண்டாயிற்று. இவ்வாறாகக் கர்த்தர் தம்முடைய ஜனமாகிய யூதஜாதியாரை இரட்சிக்கிறார். (எஸ் 9:1-3).

“மொர்தெகாய் ராஜாவின் அரமனையில் பெரியவனாயிருந்தான்” - மொர்தெகாயின் கீர்த்தி எல்லா நாடுகளிலும் பிரசித்தமாயிற்று. யூதர் தங்கள் சத்துருக்களையெல்லாம் பட்டயத்தால் வெட்டிக்கொன்று நிர்மூலமாக்கினார்கள். (எஸ் 9:4-5).

6. சூசான் அரண்மனையில் யூதரின் 500 விரோதிகள் கொல்லப்படுகிறார்கள்

எஸ்தர் 9:6 யூதர் சூசான் அரமனையிலும் ஐந்நூறுபேரைக் கொன்று நிர்மூலமாக்கினார்கள்.

எஸ்தர் 9:7 அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் யூதருடைய சத்துருவின் குமாரனான பார்சான்தாத்தா, தல்போன், அஸ்பாதா,

எஸ்தர் 9:8 பொராதா, அதலியா, அரிதாத்தா,

எஸ்தர் 9:9 பர்மஷ்டா, அரிசாய், அரிதாய், வாய்சாதா ஆகிய பத்துப்பேரையும் கொன்றுபோட்டார்கள்.

எஸ்தர் 9:10 ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

9 அதிகாரம்

எஸ்தர் 9:11 அன்றையதினம் சூசான் அரமனையில் கொன்றுபோட்டவர்களின் தொகை ராஜசமுகத்தில் கொண்டுவரப் பட்டது.

"கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை" - கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் சவுல் கொள்ளைப் பொருளின்மீது ஆசைப்பட்டான். இதற்காக கர்த்தருடைய சாபம் அவன்மீது வந்தது. (1சாமு 15). அப்படிப்பட்ட நிலைமை தங்களுக்கு வந்துவிடக்கூடாது என்று யூதர்கள் கர்த்தருக்குப் பயந்து, கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

7. எஸ்தரின் மற்ற விண்ணப்பங்களையும் இராஜா அங்கீகரிக்கிறான்

எஸ்தர் 9:12 அப்பொழுது ராஜா, ராஜாத்தியாகிய எஸ்தரை நோக்கி: யூதர் சூசான் அரமனையில் ஐந்நூறுபேரையும் ஆமானின் பத்துக் குமாரரையும் கொன்று நிர்மூலமாக்கினார்கள்; ராஜாவின் மற்ற நாடுகளிலும் என்ன செய்திருப்பார்களோ! இப்போதும் உன் வேண்டுதல் என்ன? அது உனக்குக் கட்டளையிடப்படும்; உன் மன்றாட்டு என்ன? அதின்படி செய்யப்படும் என்றான்.

"யூதர் சூசான் அரமனையில் ஐந்நூறு பேரையும் ஆமானின் பத்துக் குமாரரையும் கொன்று நிர்மூலமாக்கினார்கள்" - அரமனையில் இத்தனை பேர் சங்காரம் பண்ணப்பட்டார்கள் என்னும் கணக்கை அகாஸ்வேரு எஸ்தரிடம் கூறுகிறான். தங்களுடைய அரமனையிலேயே இத்தனை பேர் கொல்லப்பட்டிருந்தால், மற்றப் பட்டணங்களில் மேலும் இத்தனை பேர் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று ராஜா ஆச்சரியப்படுகிறான். இதற்கு மேலும் எஸ்தருக்கு ஏதாவது விண்ணப்பம் இருக்குமென்றால், அதையும் செய்து தருவதற்கு ராஜா சம்மதிக்கிறான்.

8. ஆமானின் பத்து குமாரர்கள் தூக்கிலிடப்படவேண்டும் என்னும் எஸ்தரின் விண்ணப்பம் - யூதர்களின் விரோதிகளுக்கு மேலும் தண்டனைகள் - சூசானில் மேலும் முந்நூறு பேர் கொல்லப் படுகிறார்கள்

எஸ்தர் 9:13 அப்பொழுது எஸ்தர்: ராஜாவுக்குச் சித்தமாயிருந்தால், இன்றையதினத்துக்குக் கட்டளையின்படியே சூசானிலிருக்கிற யூதர் நாளையதினமும் செய்யவும், ஆமானின் பத்துக் குமாரரின் உடலையும் தூக்குமரத்தில் தூக்கிப்போடவும் உத்தரவாக வேண்டும் என்றாள்.

எஸ்தர் 9:14 அப்படியே செய்யும்படிக்கு ராஜா உத்தரவு கொடுத்தான்; அதற்குச் சூசானிலே கட்டளை பிறந்தது; ஆமானின் பத்துக் குமாரருடைய உடலையும் தூக்கிப்போட்டார்கள்.

எஸ்தர் 9:15 சூசானிலிருக்கிற யூதர் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியிலும் கூடிச்சேர்ந்து, சூசானில் முந்நூறுபேரைக் கொன்றுபோட்டார்கள்; ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

"ஆமானின் பத்துக் குமாரரின் உடலையும் தூக்குமரத்தில் தூக்கிப்போடவும் உத்தரவாக வேண்டும்" - மொர்தெகாய்க்காக ஆயத்தமாக்கப்பட்ட தூக்குமரத்தில் ஆமானின் பத்துக் குமாரரின் உடலையும் தூக்கிப் போட ராஜா உத்தரவு கொடுக்க வேண்டுமென்று எஸ்தர் விண்ணப்பம் பண்ணுகிறாள். எஸ்தரின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சூசானில் இதன் பின்பும், யூதர்கள் முந்நூறுபேரைக் கொன்றுபோட்டார்கள்; ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை. (எஸ் 9:13-15).

9. மற்ற பிரதேசங்களில் யூதரின் 75,000 விரோதிகள் கொல்லப்படுகிறார்கள்

எஸ்தர் 9:16 ராஜாவின் நாடுகளிலுள்ள மற்ற யூதர்கள் தங்கள் பிராணனைத் தற்காக்கவும், தங்கள் பகைஞருக்கு விலகி இளைப்பாறுதல் அடையவும் ஒருமிக்கச் சேர்ந்து, தங்கள் விரோதிகளில் எழுபத்தையாயிரம் பேரைக் கொன்றுபோட்டார்கள்; ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

9 அதிகாரம்

“மற்ற யூதர்கள்.....ஒருமிக்கச் சேர்ந்து” - அகாஸ்வேரு ராஜாவின் பெர்சிய தேசத்திலுள்ள 127 நாடுகளிலுமுள்ள யூதர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, தங்களுடைய சத்துருக்களில் 75,000 பேரைக் கொன்று போட்டார்கள். ஆனாலும் கொள்ளையிடத் தங்கள் கையை நீட்டவில்லை.

10. எல்லா யூதருக்கும் சந்தோஷம்

எஸ்தர் 9:17 ஆதார் மாதத்தின் பதின்மூன்றாந்தேதியிலே இப்படிச் செய்து, பதினாலாந்தேதியிலே ஏகமாய்க்கூடி, பதினைந்தாந்தேதியில் இளைப்பாறி, அதை விருந்துண்டு சந்தோஷப்படுகிற பண்டிகை நாளாக்கினார்கள்.

எஸ்தர் 9:18 சூசானிலுள்ள யூதரோவென்றால், அந்த மாதத்தின் பதின்மூன்றாந் தேதியிலும் பதினாலாந்தேதியிலும் ஏகமாய்க் கூடி, பதினைந்தாந்தேதியில் இளைப்பாறி, அதை விருந்துண்டு சந்தோஷப்படுகிற பண்டிகை நாளாக்கினார்கள்.

எஸ்தர் 9:19 ஆதலால் அலங்கமில்லாத ஊர்களில் குடியிருக்கிற நாட்டுப் புறத்தாரான யூதர்கள் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியைச் சந்தோஷமும், விருந்துண்கிற பூரிப்பமான நாளும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்புகிற நாளுமாக்கினார்கள்.

“பதினாலாந்தேதியிலே ஏகமாய்க்கூடி” - சூசான் பட்டணத்திற்கு வெளியே உள்ள யூதர்கள் தாங்கள் இரட்சிக்கப்பட்டதை ஒரு பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். சூசான் பட்டணத்திலுள்ள யூதர்கள் 15 ஆம் தேதியில் தாங்கள் இரட்சிக்கப்பட்டதைப் பண்டிகையாகக் கொண்டாடுகிறார்கள். (எஸ் 9:17-19).

VI. பூரீம் பண்டிகை - எஸ்தர் இராணியின் காலத்தில் யூதர்கள் மீட்கப்பட்டதை நினைவுகூரும் வருடாந்திர பண்டிகை

எஸ்தர் 9:20 மொர்தெகாய் இந்த வர்த்தமானங்களை எழுதி, சமீபத்திலும் தூரத்திலும் இருக்கிற அகாஸ்வேரு ராஜாவின் சகல நாடுகளிலுமுள்ள எல்லா யூதருக்கும் நிருபங்களை அனுப்பி,

எஸ்தர் 9:21 வருஷந்தோறும் ஆதார் மாதத்தின் பதினாலாம் பதினைந்தாந் தேதிகளை, யூதர் தங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இளைப்பாறுதல் அடைந்த நாட்களாகவும், அவர்கள் சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறின மாதமாகவும் ஆசரித்து,

எஸ்தர் 9:22 அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங் கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ் செய்யவும் வேண்டுமென்று திட்டம்பண்ணினான்.

எஸ்தர் 9:23 அப்பொழுது யூதர் தங்கள் செய்யத்தொடங்கினபடியும் மொர்தெகாய் தங்களுக்கு எழுதினபடியும் செய்யச் சம்மதித்தார்கள்.

எஸ்தர் 9:24 அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன், யூதருக்கெல்லாம் சத்துருவாயிருந்து யூதரைச் சங்கரிக்க நினைத்து, அவர்களை அழிக்கவும் நிர்மூலமாக்கவும், பூர் என்னப்பட்ட சீட்டைப் போடுவித்தான்.

எஸ்தர் 9:25 ஆனாலும் எஸ்தர், ராஜசமுகத்தில் போய், யூதருக்கு விரோதமாய் அவன் நினைத்த அவனுடைய பொல்லாத யோசனை அவனுடைய தலையின்மேல் திரும்பும்படி கட்டளை பிறப்பித்ததினாலே, அவனையும் அவன் குமாரரையும் மரத்திலே தூக்கிப்போட்டார்கள்.

9 அதிகாரம்

எஸ்தர் 9:26 ஆகையினால் அந்த நாட்கள் பூர் என்னும் பேரினால் பூரீம் என்னப்பட்டது; அவன் அந்த நிருபத்தில் எழுதியிருந்த எல்லா வார்த்தைகளினிமித்தமும், தாங்களே இந்த விஷயத்தில் அநுபவித்தவை களினித்தமும், தங்களுக்கு நேரிட்டவைகளினிமித்தமும்,

எஸ்தர் 9:27 யூதர் அதைத் திட்டப்படுத்தி, அந்த இரண்டு நாட்களைக்குறித்து எழுதியிருக்கிற படியே, அவைகளை வருஷந்தோறும், அவைகளின் சரியான காலத்திலே ஆசரியாமலிருப்பதில்லை என்பதையும்,

எஸ்தர் 9:28 இந்த நாட்கள் எல்லாத் தலைமுறைகளிலும், வம்சங்களிலும், தேசங்களிலும், ஊர்களிலும் நினைவுகூரப் பட்டு ஆசரிக்கப்படவேண்டும் என்பதையும், இந்தப் பூரீம் என்னும் பண்டிகை நாட்கள் யூதருக்குள்ளே தவறிப்போகாமலும், அவைகளை நினைவுகூருதல் தங்கள் சந்ததியாருக்குள்ளே ஒழிந்து போகாமலும் இருக்கவேண்டும் என்பதையும், தங்கள் மேலும், தங்கள் சந்ததியார்மேலும், தங்கள் மார்க்கத்தில் அமையப்போகிற மற்ற யாவர்மேலும் கடனாக நியமித்துக் கொண்டார்கள்.

எஸ்தர் 9:29 பூரிமைக்குறித்து எழுதியிருக்கிற இந்த இரண்டாம் நிருபத்தைத் திடப்படுத்தும்படிக்கு, அபியாயேலின் குமாரத்தியாகிய எஸ்தர் என்னும் ராஜாத்தியும், யூதனாகிய மொர்தெகாயும், பின்னும் மகா உறுதியாய் எழுதினார்கள்.

எஸ்தர் 9:30 யூதனாகிய மொர்தெகாயும், ராஜாத்தியாகிய எஸ்தரும் யூதருக்கு உறுதிப்பாடு பண்ணினதும், அவர்கள் தானே உபவாசத்தோடும் அலறுதலோடும் ஆசரிப்போம் என்று தங்கள்மேலும் தங்கள் சந்ததியார் மேலும் கடனாக நியமித்துக்கொண்டதுமான, பூரீம் என்னப்பட்ட இந்த நாட்கள் அவைகளின் சரியான காலங்களில் ஆசரிக்கப்படும் காரியத்தை உறுதியாக்க,

எஸ்தர் 9:31 அவன் அகாஸ்வேருவின் ராஜ்யத்திலுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளிலும் இருக்கிற எல்லா யூதருக்கும் சமாதானமும் உண்மையுமான வார்த்தைகளையுடைய நிருபங்களை அனுப்பினான்.

எஸ்தர் 9:32 இப்படியே எஸ்தரின் கட்டளையானது பூரீம் நாட்களைப் பற்றின இந்த வார்த்தமானங்களைத் திடப் படுத்தினது; அது ஒரு புஸ்தகத்தில் எழுதப்பட்டது.

"மொர்தெகாய் இந்த வர்த்தமானங்களை எழுதி" - வருஷந்தோறும் ஆதார் மாதத்தின் பதினாலாம் பதினைந்தாந்தேதிகளை, யூதர் தங்கள் பகைஞருக்கு நீங்கலாகி இளைப்பாறுதல் அடைந்த நாட்களாகவும், அவர்கள் சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறின மாதமாகவும் ஆசரித்து, அந்நாட்களில் விருந்துண்டு சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், எளியவர்களுக்குத் தானதர்மஞ்செய்யவும் வேண்டுமென்று திட்டம்பண்ணினான். (எஸ் 9:20-22). இந்த நாள் பூரீம் பண்டிகை என்னப்படுகிறது. ஆமான் யூதரைச் சங்கரிக்க நினைத்து, அவர்களை அழிக்கவும் நிர்மூலமாக்கவும், பூர் என்னப்பட்ட சீட்டைப் போடுவித்தான். அந்தச் சீட்டின் பெயராலேயே இந்தப் பண்டிகைக்குப் பூரீம் பண்டிகை என்னும் பெயர் வழங்கலப்படலாயிற்று. (எஸ் 9:24-28, எஸ் 3:7). யூதர் மத்தியிலே இன்றும் பூரீம் பண்டிகையை இஸ்ரவேல் புத்திரர் ஆசரிக்கிறார்கள். இந்தப் பண்டிகை நாளில் யூதர்கள் எஸ்தர், தானியேல், நெகேமியா, எஸ்றா ஆகிய புஸ்தகங்களை வாசித்து மகிழுகிறார்கள்.

"யூதர் அதைத் திட்டப்படுத்தி" - யூதர்கள் பூரீம் பண்டிகையைத் திடப்படுத்துகிறார்கள். இது மனுஷரால்நியமிக்கப்பட்டிருக்கும் பண்டிகை. லேவி 23 ஆவது அதிகாரத்தில் கூறப் பட்டிருப்பவை கர்த்தரால் நியமிக்கப்பட்டவை. இஸ்ரவேல் புத்திரர் மற்ற பண்டிகைகளை உண்மையோடும், பக்தியோடும் ஆசரிப்பது போலவே பூரீம் பண்டிகையையும் ஆசரிக்கிறார்கள். (எஸ் 9:27-28).

"இந்தப் பூரீம் என்னும் பண்டிகை" - யூதர்கள் இந்தப் பண்டிகையை அவர்கள் புறஜாதி தேசத்தில் இருக்கும்போதும் ஆசரிக்கிறார்கள். மேலும் இந்தப் பண்டிகையை தங்கள் சந்ததியாரும் ஆசரிக்க வேண்டுமென்று நியமித்துக் கொள்கிறார்கள்.

எஸ்தர் – தொகுப்புரை

9 அதிகாரம்

"பூரிமைக்குறித்து எழுதியிருக்கிற இந்த இரண்டாம் நிருபம்" - பூரிம் பண்டிகையைக் குறித்து எஸ்தரும், மொர்தெகாயும் இரண்டாம் நிருபத்தை எழுதுகிறார்கள். இதனால் இந்தப் பண்டிகையை ஆசரிக்கும் வழக்கம் இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் உறுதியாயிற்று. ஸ்திரீயின் வித்து, சாத்தானை நசுக்கும் என்னும் வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்குக் கர்த்தர் இங்கு எஸ்தர் என்னும் ஒரு ஸ்திரீயைப் பயன்படுத்தியிருக்கிறார். (ஆதி 3:15).

10 அதிகாரம்

VII. பெர்சிய இராஜ்ஜியத்தில் மொர்தெகாயின் உயர்வு

எஸ்தர் 10:1 ராஜாவாகிய அகாஸ்வேரு தேசத்தின் மேலும், சமுத்திரத்திலுள்ள தீவுகளின் மேலும், பகுதி ஏற்படுத்தினான்.

எஸ்தர் 10:2 வல்லமையும் பராக்கிரமமுமான அவனுடைய எல்லாச் செய்கைகளும், ராஜா பெரியவனாக்கின மொர்தெகாயினுடைய மேன்மையின் விர்த்தாந்தமும், மேதியா பெர்சியா ராஜாக்களின் நடபடி புஸ்தகத்தில் அல்லவோ எழுதியிருக்கிறது.

எஸ்தர் 10:3 யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதானவனும், யூதருக்குள் பெரியவனும், தன் திரளான சகோதரருக்குப் பிரியமானவனுமாயிருந்ததும் அன்றி தன் ஜனங்களுடைய நன்மையை நாடி, தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாகப் பேசுகிறவனுமாயிருந்தான்.

"அகாஸ்வேரு தேசத்தின் மேலும், சமுத்திரத்திலுள்ள தீவுகளின் மேலும், பகுதி ஏற்படுத்தினான்" - அகாஸ்வேரு பெரிய சக்கரவர்த்தியானான். ராஜா மொர்தெகாயைப் பெரியவனாக்கினான். பெர்சிய தேசத்திலுள்ள எல்லா யூதர்களும் மொர்தெகாயைத் தங்களுடைய தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். தங்களுக்கு மொர்தெகாய் செய்த நன்மைகளை யூதர்கள் அங்கிகரிக்கிறார்கள். (எஸ் 10:1-3). அகாஸ்வேருக்கும், எஸ்தருக்கும் பிறந்த குமாரனின் பெயர் கோரேசு. இவன் கர்த்தர்மீது பக்தியாயிருந்து, யூதர்கள் பாலஸ்தீன தேசத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதியளிக்கிறான்.